விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 23 வியாழக்கிழமை (08.08.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 232

# வடக்கில் தமிழ் மக்களின் பெரும்பான்மை பாதுகாக்கப்படும்

## பாராளுமன்றில் பிரதமர் ரணில் உறுதி

**(கொழும்பு)**
**சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி வடக்கின் இன ரீதியிலான விகிதாசாரத்தை மாற்றியமைக்க ஒருபோதும் இடமளிக்க மாட்டேன் என்றும், வடக்கில் தமிழ் மக்களின் பெரும்பான்மை பாதுகாக்கப்படும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் உறுதியளித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று கேள்வி நேரத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்கு பதில் தெரிவிக்கும் 23



சஹரானுடன் தொடர்புடைய

## மேலும் மூவர் அம்பாறையில் கைது


(கொழும்பு)
தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் சஹரான் ஹாசிமுடன் நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை முகாம்களில் பயிற்சிபெற்ற மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரும் நேற்று புதன் கிழமை அம்பாறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள், இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள தேசிய தௌஹீத் ஜமாத் மற்றும் ஜமியத்தே மில்லாது இப்ராஹிம் 23

# மூடிய அறைக்குள் ரணில் - சஜித் ஆலோசனை

## ஜனாதிபதி வேட்பாளர், கூட்டணி தொடர்பில் பேசப்பட்டிருக்கலாம்



**(கொழும்பு)**
**ஐ.தே.க தலைவர் ரணில் மற்றும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் மூடிய அறைக்குள் இரகசிய ஆலோசனை நடத்தியுள்ளனர்.**
**ஜனாதிபதி வேட்பாளர் மற்றும் ஐ.தே.க கூட்டணி தொடர்பில் இச்சந்திப்பில் பேசப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.** 23

# எதிர்வரும் 10ஆம் திகதி பொது அமைப்புக்களுடன் சந்திப்பு

## தமிழ் மக்கள் பேரவை அழைப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி நடைபெறவுள்ள மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி தொடர்பில் முன்னேற்பாடுகளைச் செய்வதற்காக, அனைத்து பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு நாளை மறுதினம் 10ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில் அனைத்துப் பொது அமைப்புக்களை 23

2019 வரவு-செலவுத் திட்ட

# யோசனைகளுக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)
நிதி அமைச்சர் மங்கள சமரவீரவினால் சமர்ப்பிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட யோசனையில் முன்மொழியப்பட்ட வரிச்சலுகைகளுக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

மேலும் தேசத்தை கட்டியெழுப்பும் வரித் திருத்தச் சட்டம் மற்றும் பெறுமதி சேர் வரித் திருத்தச் சட்டம் என்பனவற்றுக்கு அமைச்சரவையின் அனுமதியும் கிடைத்துள்ளதாகவும் நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த சட்டங்களுக் 23

# சிங்கள மாணவரிடையே யாழ்.பல்கலையில் கைகலப்பு

## ஒளிப்படம் பிடித்தவரை அச்சுறுத்திய இராணுவம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பயிலும் சிங்கள மாணவர்களுக்கு இடையே இடம்பெற்ற கைகலப்பை வேடிக்கை பார்த்த இராணுவத்தினர், அதனை ஒளிப்படம் பிடித்தவரை அழைத்துச் சென்று அச்சுறுத்திவிட்டு விடுவித்தனர்.

அத்துடன், அவரது அலைபேசி பறிக்கப்பட்டு அதிலிருந்த ஒளிப்படங்கள் அனைத் 23

வெற்றிலைக்கேணியில் பேரப்பிள்ளைகளின் சண்டையினை

# விலக்குப்பிடிக்கச் சென்ற பேர்த்தியார் கத்திக்குத்துக்கு இலக்காகி மரணம்

(கரணவாய்)
பேரப்பிள்ளைகளின் சண்டையினை விலக்குப்பிடிக்கச் சென்ற பேர்த்தியார் கத்திக்குத்துக்கு இலக்காகி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 10.00 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் தங்கேஸ்வரி (வயது-72) என்ற பேர்த்தியாரே மரணமானவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

உயிரிழந்த மூதாட்டியின் பேரப்பிள்ளைகளான அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையில் சண்டை ஏற்பட்டதாகவும் இதில் தம்பியார் அண்ணனை தாக்குவதற்கு கத்தியை கையில் வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

அவர்களின் சண் 23

நாட்டின் நிர்வாகத்துக்கு

## கரு ஜயசூரியவே பொருத்தமானவர்

அஸ்கிரிய பீடம்

(கொழும்பு)
சபாநாயகர் கரு ஜயசூரிய நாட்டின் நிர்வாகத்தை கொண்டு செல்வதற்கு பொருத்தமானவர் என அஸ்கிரிய பீட போசகர் வெடருவே உபாலி 23

டெனீஸ்வரனை பதவி நீக்கிய வழக்கு

# நீதியரசர் விக்னேஸ்வரன் உயர் நீதிமன்றில் மேன்முறையீடு

(யாழ்ப்பாணம்)
வட மாகாண முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரனை முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பதவி நீக்கியமை தவறு என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து விக்னேஸ்வரன் தரப்பு உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய 23

# காய்ச்சலுக்கு சில மருந்து வகைகளை பயன்படுத்த வேண்டாம்

## சுகாதார அமைச்சு அவசர அறிவிப்பு

(கொழும்பு)
காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் எவரும் காய்ச்சலுக்காக சில மருந்து வகைகளைப் பயன்படுத்துவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அந்தவகையில், அஸ்பிரின் (Aspirin) உள்ளிட்ட ஸ்ரிறொயிட் அல்லாத அலர்ஜி எதிர்ப்பு மருந்துகள் (non-ste- 23

# கின்னஸ் சாதனையாளன் வல்வையூர் மைந்தன்

ஆழம் அறிந்து ஆழி கடந்தவன் ஆழிக்குமரன் ஆனந்தன் ஞாபகார்த்தமான
இளைஞர்களுக்கான சர்வதேச வசதிகளுடனமைந்த

## குமார் ஆனந்தன் நீச்சல் தடாகத் திறப்பு விழா



இடம் :- வல்வெட்டித்துறை
திகதி :- 09.08.2019
நாள் :- வெள்ளிக்கிழமை
நேரம் :- மு.ப 10.00 மணி


**வழிகாட்டல்**
அதி மேன்மை தங்கிய ஜனாதிபதி **மைத்திரிபால சிறிசேன** அவர்கள் மற்றும் கௌரவ பிரதமர் **ரணில் விக்கிரமசிங்க** அவர்கள்

**அழைப்பாளர்**
கௌரவ தொலைத்தொடர்பு வெளிநாட்டு வேலைவாய்ப்பு விளையாட்டுத்துறை அமைச்சர் **ஹரீன் பிரனாந்து** அவர்கள்

**பங்குபற்றுவோர்**
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் **எம்.ஏ.சுமந்திரன்** அவர்கள் **மாவை சேனாதிராசா** அவர்கள்

**திறந்து வைப்பவர்**
கௌரவ நிதி அமைச்சர் **மங்கள சமரவீர** அவர்கள்

**ஆழிக்குமரனின் கின்னஸ் சாதனைகள்** இடைவிடாத துவிச்சக்கரவண்டி ஓட்டம் :- 187 மணித்தியாலம் 28 நிமிடம் (1979-கொழும்பு)
தலைமன்னாரிலிருந்து தனுஸ்கோடிக்கும் பின் தனுஸ்கோடியிலிருந்து பாக்குநீரிணைக்கும் நீந்தியமை - 51 மணித்தியாலம் 35 நிமிடம் (1975)




**Treading In Water**
கைகளாலும் கால்களாலும் தவளை போல் நீரை உதைத்தல்-80 மணித்தியாலம் 33 விநாடி (1981)

**High Kicks** காலை உயர்த்தி உதைத்தல் 6 மணித்தியாலம் 51 நிமிடம் (1980-1981)

**Ball Punching**
பந்தைக்குத்துதல்-136 மணித்தியாலம் 28 நிமிடம் (1979-கொழும்பு)

**Sit-ups** உட்கார்ந்து எழும்புதல்-2 நிமிடங்கள் 165 தடவை (1980-கொழும்பு)

**Balancing in one foot** ஒற்றைக்காலில் சமநிலையாக நிற்றல்-33 மணித்தியாலம் (1980-கொழும்பு)



ஈழமணித் திருநாட்டின் உலக சாதனையாளர் குமார் ஆனந்தனின் ஞாபகார்த்த நீச்சல் தடாகத் திறப்பு விழாவிற்கு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனத் திரண்டு வந்து எம் மண்ணின் மைந்தனின் தீரத்தை போற்றுவோம் வாரீர்.

**குடும்பத்தினரும், வல்வை வாழ் மக்களும்.**

(9826)

# சுஷ்மாவின் மறைவு இந்தியாவிற்கு மட்டுமல்ல இலங்கைக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பு

## அமைச்சர் இராதாகிருஷ்ணன் இரங்கல்





(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜின் மறைவு இந்தியாவிற்கு மட்டுமல்ல இலங்கைக்கும் ஈடு செய்யமுடியாத இழப்பாகும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்தியாவின் முன்னாள் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் திடீர் உடல் நலக் குறைவு காரணமாக நேற்று முன்தினம் இரவு காலமானார்.

அவரது மறைவு குறித்து நேற்றுப் புதன்கிழமை அனுப்பிவைத்துள்ள இரங்கல் செய்தியிலேயே இராதாகிருஷ்ணன் இவ்வாறு குறிப்பிட்டார்.

குறித்த செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில், “மறைந்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பலமுறை இலங்கைக்கு விஜயம் செய்து இங்கு இந்திய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக மிகவும் அவதானமாக கவனம் செலுத்தியவர். இலங்கையைப் பொறுத்த வரையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு மிகவும் சாதுர்யமாகவும் மிகவும் நுணுக்கமாகவும் செயற்பட்டு அதற்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தவர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மலையகப் பகுதிக்கு விஜயம் செய்ததில் பாரிய ஒரு பங்களிப்பு முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சருடையது.

உலக வரலாற்றில் பெண் அரசியல் செயற்பாட்டாளர்களாக ஒரு சிறிய பகுதியினரே செயற்பட்டு வருகின்றனர். அந்த வகையில்அவர்களுக்கெல்லாம்பெருமை சேர்க்கும் வகையில் செயற்பட்டவர் அமரர் சுஷ்மா சுவராஜ்.

அவரை இழந்து தவிக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தியாவின் அனுபவம் மிக்க அரசியல்வாதியும் சிறந்த ஆளுமையைக் கொண்டவரும் பெண்களின் திறமைக்கு எடுத்துக்காட்டாகவும் இலங்கையின் ஒரு சிறந்த அரசியல் நண்பருமாக இருந்த இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜின் மறைவு இந்தியாவிற்கு மட்டுமல்ல இலங்கைக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## புழுதிக்கு மத்தியில்

# மைதானத்தில் தொடரும் கற்றல் செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை ஆரம்பப்பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் வயாவிளான் மத்திய கல்லூரியின் மைதானத்தில் தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது.

போர்க் காலத்தில் இடம்பெயர்வுகளைச் சந்தித்த குறித்த பாடசாலைச் சமூகத்தினர் உரும்பிராய்ப் பகுதியில் சிலகாலம் தனியார் வீட்டில் கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தனர்.

வீட்டு உரிமையாளர் தனது வீட்டை கையளிக்குமாறு விடுத்த கோரிக்கைக்கு அமைய வயாவிளான் மத்திய கல்லூரி மைதானத்தில் அடிப்படை வசதிகளற்ற நிலையில் தற்காலிகக் கூடாரத்தில்தற்போது இயங்கிவருகிறது.

வயாவிளான் மத்திய கல்லூரியின் ஊட்டல் பாடசாலைகளான வயாவிளான் றோமன் கத்தோலிக்கப்பாடசாலை மற்றும் வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை ஆரம்பப் பாடசாலை ஆகியன விளங்கிய போதும் ஸ்ரீ வேலுப்பிள்ளை ஆரம்பப்பாடசாலையே குறித்த வலயத்தில் அதிக மாணவர்களைக் கொண்ட பாடசாலையாக விளங்குகிறது.

சுமார் 380 மாணவர்களைக் கொண்ட குறித்த ஆரம்பப் பாடசாலையில் கடந்த 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களும் மைதானப் புழுதியால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினர்.

குறித்த பாடசாலைக்கு வருகை தரும் அரசியல் வாதிகள் மீண்டும் சொந்த இடத்தில் பாடசாலையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதிகளை அள்ளி வழங்கிய போதும் இன்றுவரை தற்காலிகக் கூடாரத்துக்குள் புழுதிக்கு மத்தியில் கல்வியைத் தொடரவேண்டிய அவலநிலை தொடர்கிறது.

எனவே குறித்த பாடசாலைச் சமூகத்தின் நீண்ட நாள் கோரிக்கையான வயாவிளான் சந்திக்கு அண்மையிலுள்ள காணியில் குறித்த பாடசாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தமிழ் அரசியல்வாதிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10)


# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1949 . 08 . 13



உதிர்வு 2016 . 08 . 11

## அமரர் ச.தர்மரத்தினம் CTB

(ஓய்வுநிலை சிரேஷ்ட சாலைப்பரிசோதகர்-இ.போ.ச)

மூன்றாண்டு சென்றதையா ஆறவில்லை எம்மனது
குடும்பத்தின் குலவிளக்காய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் திருவுருவாய் ஊருக்கோர் எடுத்துக்காட்டாய்
அனைவரையும் புன்முறுவலுடன் ஈர்த்து வாழ்ந்தவரே
பிறப்பின் பயன் அதனை புண்ணியத்தால் நிரப்பியதால்
இறப்பும் உமக்கு பூரணமாய் அமைந்ததையா
எங்கள் உடலில் உயிர் இருக்கும்வரை உங்களை
நம் உள்ளங்களில் நிறுத்தி வைத்திருப்போம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனை பிரார்த்திப்போம்.

மனைவி- த.கலாவதி
பிள்ளைகள்- வி.செந்தூரன்
வி.குமரன்
வி.துவாரகன்

“கலாகேந்திரா”
அல்வாய்.

(C-7223)


## கடற்படை, விமானப்படை

# முன்னாள் தளபதிகளுக்கு பதவியுயர்வு



(கொழும்பு)

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட மற்றும் முன்னாள் விமானப்படைத் தளபதி ரொஷான் குணதிலக ஆகியோர் பதவி நிலைகளில் தரம் உயர்த்தப்பட்டனர்.

இதற்கான விசேட வர்த்தமானி அறிவிப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

அதன்படி, 2005 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை கடற்படைத் தளபதியாக பணியாற்றிய வசந்த கரன்னகொட, கடற்படையின் அட்மிரலாக பதவி உயர்வு பெற்றார். இதேவேளை, 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை விமானப் படைத் தளபதியாக பணியாற்றிய ரொஷான் குணதிலக, விமானப் படை சீப் மார்ஷலாக பதவி உயர்வு பெற்றார். (இ-7)

# தாக்குதல் குறித்து கர்தினாலுக்கும் நிறைய தகவல்கள் தெரியுமாம்

## தெரிவுக்குழுவிற்கு அழைக்குமாறு ரஞ்சன் கோரிக்கை



(கொழும்பு)

குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்தும் விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு ஜனாதிபதி மட்டுமல்லாது பேராயர் கர்தினாலும் அழைக்கப்பட வேண்டும் என இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி சிறந்த பேச்சாளர் என்பதால் ஹேமசிறி பெர்னாண்டோ கூறினாரா? அல்லது பூஜித கூறினாரா? தான் அறிந்திருந்தாரா? என்பதை அவரிடம் கேட்டறிய முடியும்.

பேராயர் கர்தினாலை தெரிவுக்குழுவுக்கு அழைத்தால் நல்லது. இதனைக் கௌரவமாக கூறுகின்றேன். தொலைபேசி அழைப்புக்கள் பற்றி அவரே கூறினார்.

அவரிடம் நிறைய தகவல்கள் இருக்கலாம் எனவும் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார். (இ-7)

## ஆஷஸ். டெஸ்ட் கிரிக்கெட்தொடர்

# ஆண்டர்சனைத் தொடர்ந்து ஒல்லிஸ்டோனும் விலகல்



இங்கிலாந்தின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் ஆண்டர்சன் லார்ட்ஸ் டெஸ்டில் இருந்து விலகிய நிலையில், ஒல்லி ஸ்டோனும் விலகியுள்ளார்.

இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணி களுக்கு இடையில் ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நடை பெற்று வருகிறது.

எட்ஜ்பாஸ்டனில் நடைபெற்ற முதல் டெஸ் டில் அவுஸ்திரேலியா 251 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் நான்கு ஓவர்கள் மட் டுமே வீசிய நிலையில் இங்கிலாந்து அணி யின் தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் ஆண்டர்சன் காயத்தால் வெளியே றினார்.

இதனால் லண்டன் லார்ட்ஸ் மைதா னத்தில் எதிர்வரும் 14-ஆம் திகதி தொடங் கும் 2-வது போட்டியில் இருந்து அவர் விலகி யுள்ளார். நான்காவது அல்லது ஐந்தாவது டெஸ்டிற்குத்தான் உடற்தகுதி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் மற்றொரு வேகப்பந்து வீச்சாளரான ஒல்லி ஸ்டோன் முதுகு வலி காரணமாக தற்போது லார்ட்ஸ் டெஸ்டில் இருந்து விலகியுள்ளார். அவர் இரண்டு வாரம் ஓய்வு எடுக்க வேண்டும் என வலியு றுத்தப்பட்டுள்ளது. (ம)

## இருபது - 20 கிரிக்கெட்டில் விளையாட நாதன் லயன் தகுதியானவர் -ரிக்கி பொன்ரிங்



அவுஸ்திரேலிய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான நாதன் லயன் இருபது - 20 கிரிக்கெட்டில் விளையாட தகுதியானவர் என்று ரிக்கி பொன்ரிங் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளராக திகழ்பவர் நாதன் லயன். முன்னணி சுழற்பந்து வீச்சாளராக இருந் தாலும் ஒருநாள் மற்றும் இருபது -20 போட்டிகளில் அதிக அளவில் விளையாடி யது கிடையாது. 87 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அவர், 29 ஒருநாள் போட் டியிலும், 2 இருபது -20 போட்டிகளிலும் மட்டுமே விளையாடியுள்ளார்.

எட்ஜ்பாஸ்டனில் நடைபெற்ற ஆஷஸ் முதல் டெஸ்டின் 2-வது இன்னிங்சில் 6 விக் கெட்டுக்கள் வீழ்த்தினார். இந்நிலையில் இருபது -20 போட்டியிலும் விளையாட தகுதி யானவர் என்று ரிக்கி பொன்ரிங் தெரிவித் துள்ளார்.

ரிக்கி பொன்ரிங் இதுகுறித்து கூறுகையில் "நாதன் லயன் சிறந்த பந்து வீச்சாளராக வளர்ந்து வருகிறார். அவரை இருபது -20 போட்டிக்கான அணியில் தேர்வு செய்ய அவர் பெயர் பரிசீலனை செய்யப்படலாம். ஏனென்றால் அவர் தற்போது சிறப்பாக பந்து வீசி வருகிறார். தற்போது அவர் டெஸ்ட் போட்டியில் விளையாடிவரும் வகையை பார்க்கும்போது எல்லா வகை கிரிக்கெட்டிலும் விளையாட தகுதியானவர்" என்றார்.

# டோனியின் சாதனையை முறியடித்தார் ரிஷப் பந்த்



மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான 3-வது இருபது-20 போட்டியில் 42 பந்தில் 65ஓட்டங்கள் குவித்த ரிஷப் பந்த் டோனியின் சாதனையை முறியடித்துள்ளார்.

இந்தியா - மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான 3-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் விக்கெட் கீப்பரான ரிஷப் பந்த் ஆட்ட மிழக்காமல் 65 ஓட்டங்கள் குவித்து அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தார்.

முதல் இரண்டு போட்டிகளில் மோசமான ஷாட் மூலம் ஆட்ட மிழந்ததால் விமர்சனத்திற்குள்ளானார். இந்நிலையில்தான் 3-வது ஆட்டத்தில் பொறுப்புடன் விளையாடி அசத்தினார்.

மேலும் எம்எஸ் டோனியின் சாதனையையும் முறியடித்துள்ளார். எம்எஸ் டோனி இருபது - 20 போட்டியில் 56 ஓட்டங்கள் அடித்ததே இந்திய விக்கெட் கீப்பர் அடித்த அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை இதை ரிஷப் பந்த் முறியடித்துள்ளார். (ம)

# ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் மரியா ஷரபோவா தோல்வி

ரோஜர்ஸ் கோப்பை டென் னிஸ் தொடரின் மகளிர் ஒற்றை யர் பிரிவு முதல் சுற்றில், நட்சத்திர வீராங்கனை மரியா ஷரபோவா அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

கனடாவில் நடைபெறும் இந்த தொடரில், காயம் காரணமாக நீண்ட ஓய்வில் இருந்த ஷர போவா (ரஷ்யா) 'வைல்டு கார்டு' சிறப்பு அனுமதி பெற்று கள மிறங்கினார்.

முதல் சுற்றில் எஸ்டோ னியாவின் அனெட் கோன்டா வெய்ட்டுடன் மோதிய ஷரபோவா 6-4 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார். எனினும், 2வது செட்டில் கடும் நெருக்கடி கொடுத்த கோன்டாவெய்ட் 6-3 என வென்று பதிலடி கொடுக்க சமநிலை ஏற் பட்டது.

மூன்றாவது செட்டிலும் அதிரடி யாக புள்ளிகளைக் குவித்த கோன்டாவெய்ட் 4-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் வென்று 2வது சுற்றுக்கு முன்னேறினார். விறுவிறுப்பான இப்போட்டி 2 மணி, 42 நிமிடத்துக்கு நீடித்தது. மற்றொரு முதல் சுற்றில் ஜெர் மனியின் ஏஞ்சலிக் கெர்பர் 6-0, 2-6, 4-6 என்ற செட் கணக்கில் டாரியா கசட்கினாவிடம் (ரஷ்யா) தோற்று வெளியேறினார். முன் னணி வீராங்கனைகள் சோபியா கெனின் (அமெரிக்கா), பெலி ண்டா பென்சிக் (சுவிஸ்), கரோ லின் வோஸ்னியாக்கி (டென் மார்க்), ஸ்வெட்லானா கஸ்னட் சோவா (ரஷ்யா) ஆகியோரும் 2வது சுற்றுக்கு முன்னேறி உள் ளனர்.



# பழக்கடை மற்றும் கராஜ் தீயில் எரிந்து நாசம்

## சாவகச்சேரிப்பகுதியில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகுதியில் பழக்கடை மற்றும் வெல்டிங் கராஜ் என்பன தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இச்சம்பவம் நேற்றிரவு 9.00 மணியளவில் ஏ9 வீதியில் சாவகச்சேரி மடத்தடி சந்திப் பகுதியில் இடம்பெற் றுள்ளது.

இதில் முஸ்லிம் வியாபாரி யின் பழக்கடை மற்றும் வெல் டிங் கராஜ் ஒன்றுமே இவ் வாறு தீயில் எரிந்து நாசமாகி யுள்ளதாகப் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மாநகரசபை தீயணைப்புப் பிரிவினருக்கு அறிவிக் கப்பட்டதையடுத்து அங்கு விரைந்த அவர்கள் தீயை கட்டுப்படுத்தும் நடவடிக் கையை மேற்கொண்ட போதிலும் பழக்கடை முற்றாக எரிந்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

எவ்வாறு இந்தத் தீ விபத்து ஏற்பட்டது என்பது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெ டுத்து வருகின்றனர்.

(ம:3.30.89.114)

# வர்த்தக நிலையத்தில் திருட்டு உடுப்பிட்டிப் பகுதியில் சம்பவம்

(கரணவாய்)

உடுப்பிட்டு நாவலடி பகுதியில் பூட்டியிருந்த வர்த்தக நிலையம் ஒன்று திறக்கப்பட்டு அங்கிருந்த 50 ஆயிரம் ரூபா பணம், மற்றும் 45ஆயிரம் ரூபாய் பொறுமதியான தொலைபேசி மீள்நிரப்பு அட்டை என்பன திருடப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு வர்த்தக நிலை யத்தினை பூட்டிய அதன் உரிமை யாளர் பின்புறம் உள்ள தனது வீட்டு விறாந்தையில் படுத்திருந்த போது அவர் வைத்திருந்த திறப்பினை எடுத்து கடையினை திறந்த திருடர் கள் அங்கிருந்த 50 ஆயிரம் ரூபாய் பணம், மற்றும் 45 ஆயிரம் ரூபாய் பொறுமதியான தொலைபேசி மீள் நிரப்பு அட்டை, அழகு சாதனப் பொருட் கள் என்பவற்றை திருடிச் சென்றுள்ள னர்.

இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

(ம.03.60)

# தாதியர் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

நாடு பூராகவும் உள்ள தாதிய உத்தியோகத்தர்கள் இன்று காலை 7. மணிமுதல் நாளை காலை 7 மணிவரை ஒருநாள் சேவை புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக வடமாகாண அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (ம.03.10)

# அரியாலை திருமகள் சன சமூக நிலைய வலைப்பந்தாட்டம்

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 67ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் நடைபெறும் வலைப்பந் தாட்டப்போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

லண்டன் வாழ். அ.காந்தன் ஆதரவில் அமரர் கந்தையா அரியரட் ணம் ஞாபகார்த்தமாக நடைபெறும் மேற்படி சுற்றுப்போட்டி திருமகள் சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 14ஆம் திக திக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு 076-844 7081

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்.சண்முகம் விஸ்வநாதர் முருகேசு

(S.V.M நிறுவனத்தின் ஸ்தாபகர்–விளானை களபூமி, காரைநகர்.)



சுழன்றோடும் உலகமதில்
உண்மை, நேர்மை, உயர்வை
எமக்குக் கற்றுத் தந்தது நீ
முயற்சியின் பலன்களை
உம்மில் கண்டு கொண்டோமே
ஆண்டுகள் ஒன்பது
ஓடி மறைந்தது ஐயா – ஏனோ
அன்பின் உருவான உம் முகத்தை
இன்புறப் பேசும் உம் பேச்சை
தவறைத் தட்டிச் சொல்லும்
உம் துணிச்சலை
இன்றுவரை மறக்க முடியவில்லை
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வார்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
என்ற வள்ளுவன் வாக்கை
இன்றும் எம்மில் புதைத்து
இறைவன் திருவடியில் நீ இளைப்பாற
கூத்த பெருமானை பணிகின்றோம்.

(C-7222)

**பிறப்பு**
**23.12.1923**

**இறப்பு**
**16.08.2010**

தி.தி: 08.08.2019

எஸ். வி.முருகேசு, இல. 154,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

S.V.M நிறுவனத்தின்
உரிமையாளர்களும் ஊழியர்களும்.

எஸ்.வி.எம். பிறைவேற் லிமிட்டெட்,
இல. 122, டாம் வீதி, கொழும்பு-12.

எஸ்.வி.முருகேசு, A9 வீதி,
கரடிப்போக்கு, கிளிநொச்சி.

# பொன்னொளி நகர் வீட்டுத்திட்ட வீடுகளில் குடியேறாதோரின் பதிவை நீக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பொன்னாலைப் பொன்னொளி நகரில் அரச வீட்டுத்திட்ட வீடுகளில் குடியேறாதோரின் பெயர்களை நீக்க யாழ். மாவட்ட வீடமைப்பு அதிகார சபை பிரதேச செயலகம் ஊடாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி பொன்னொளி நகரில் 65 வீடுகளை வீடமைப்பு மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ மக்களிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். குறித்த வீட்டுத்திட்டத்தைப் பெற்றோரில் 20 இற்கும் மேற்பட்டவர்கள் அந்த வீடுகளைப் பயன்படுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

வெளி ஊர்களில் வசிக்கும் சிலர் குறித்த திட்ட வீடுகளைப் பெறுவதற்காக குறித்த பகுதியில் காணிப் பதிவுகளை சங்கானைப் பிரதேச செயலகம் ஊடாக உறுதிப்படுத்திப் பெற்றுக் கொண்டதாக தெரிய வருகிறது.

குறித்த விடயம் தொடர்பில் சங்கானைப் பிரதேச செயலரைத் தொடர்பு கொண்ட போது, 1981 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட காணி உறுதிப்பத்திரத்தின் பிரகாரம் குறித்த பகுதியில் உள்ளவர்களுக்கு வீட்டுத்திட்ட வீடுகளை வழங்கியதாகவும் அவர்கள் தங்களின் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு குறித்த வீட்டுத்திட்டத்தைப் பெற்றுக் கொடுக்கலாம் எனவும் தெரிவித்தார்.

குறித்த வீட்டுத்திட்டத்தின் உரிமையாளர்களோ குடும்ப உறுப்பினர்களோ வசிப்பதில்லை என்ற முறைப்பாடு தனக்குக் கிடைத்ததாகவும் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

குறித்த பொன்னொளி நகர் கிராம வீட்டுத்திட்டத்தில் உரியவர்கள் குடியேறாமல் போர்வதற்கு அங்கு நீர்வசதி செய்து கொடுக்காதது காரணமா? எனக் கேட்ட போது,

நீர் விநியோகம் தொடர்பில் பிரதேசசபை பணியைச் செய்து வருவதாகவும் மேலதிக குழாய் நீர் விநியோகம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு திட்டங்கள் அனுப்பப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# வருமானம் குறைந்த குடும்பத்திற்கு புதிய வீடு கையளிக்கப்பட்டது





(யாழ்ப்பாணம்)

யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் வணிகசூரியவின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் அமைவாக பிரபல பாடகரான பாதிக ஜெயகொடி மற்றும் சிந்தக சொய்சா ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் 52 ஆவது படைத் தலைமையகத்திற்குட்பட்ட ஜே/326 கொடிகாமம் (வடக்கு) கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த குறைந்த வருமானத்தை பெறும் இராஜரத்தினம் ஜயகுமாரி என்பவருக்கு இரண்டறைகள், சமயலறை மற்றும் மின்னிணைப்புக்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் என்பவற்றுடன் அமைக்கப்பட்ட புதிய வீடு வழங்கும் நிகழ்வு யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. (5-9)

# தென்மராட்சி முன்பள்ளிகளின் பிரதேசமட்ட விளையாட்டு விழா

(கொடிகாமம்)

தென்மராட்சி பிரதேச முன்பள்ளிகளின் சாவகச்சேரி பிரதேச மட்ட விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய மைதானத்தில் தென்மராட்சி முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி.ச.அரியநாயகம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) திருமதி. சிவத்திரை சிவநாதன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் திருமதி.யோகேஸ்வரி குமார், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஓய்வு நிலை சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் இராசமலர் இராமலிங்கம், கைதடி நெல்லியடி சீபன் பாஸ்கர் லேணர்ஸ் இயக்குநர் கு.டசீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (5-114)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி ஆடிய பாதம் வீதியில் அமைந்துள்ள திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில், அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தலைவர் ந.சிவகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிவகுருநாதபீட குருபீடாதிபதி ஸ்ரீமத் வேத வித்தியாசாகர சுவாமிகள் முன்னிலையில் இடம்பெறவுள்ள இக் கூட்டத்திற்கு கௌரவ விருந்தினராக தமிழ்நாடு இயற்கை மருத்துவ சங்க இணைச் செயலாளரும், "இயற்கை மருத்துவம்" மாத இதழ் ஆசிரியர் குழு உறுப்பினருமான மு.சீ.தேவதாஸ் காந்தி கலந்து கொள்வார். (5)

# கடும் காற்றால் பனை முறிந்து விழுந்தது; போக்குவரத்தும் மின்சாரமும் தடைப்பட்டது

(சாவகச்சேரி)

தற்போது வீசிவரும் கடும் காற்று காரணமாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மதியம் சாவகச்சேரி-தம்பு தோட்டம் 523 படை முகாமிற்கு முன்பாக நின்ற பனை மரம் முறிந்து படை முகாம் வளாகத்திற்குள் விழுந்துள்ளது. இதன் காரணமாக மின் இணைப்புக்கள் வீதியில் அறுந்து வீழ்ந்ததுடன், சில மணி நேரங்கள் சாவகச்சேரி கச்சாய் வீதி ஊடான போக்குவத்தும் தடைப்பட்டது. விரைந்து செயற்பட்ட படையினர் பனை மரத்தை அகற்றி போக்குவரத்தை சீர்செய்ததுடன், மின்சார சபையினரும் சில மணி நேரங்களில் மின் இணைப்புக்களைச் சரி செய்திருந்தனர். படைமுகாமிற்கு முன் காணிக்குள் காணப்பட்ட குறித்த பனை மரம் விழுந்ததால் படை முகாமின் நுழைவாயில் பகுதி சேதமடைந்துள்ளது. (5-30)

# வீட்டுத்திட்ட வீடுகளை கையளிக்க அமைச்சர் சஜித் யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

யாழில் வீட்டுத்திட்ட வீடுகளைக் கையளிப்பதற்காக வீடமைப்பு மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேம தாஸ நாளை மறுதினம் சனிக்கிழமை 10 ஆம் திகதி வரவுள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் நிதிப் பங்களிப்புடனும் வீடமைப்பு அமைச்சின் நிதிப்பங்களிப்புடனும் சங்கானைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அராலி பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட 24 வீடுகளையும் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மந்துவில் பகுதியில் வீடமைப்பு அதிகார சபையால் நிர்மாணிக்கப்பட்ட 20 வீடுகளையும் பொதுமக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வில் அவர் கலந்து கொள்வார். (இ-10)

# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் 80 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை வங்கி, சாவகச்சேரி கிளையினால் நடத்தப்படும் இலவச மருத்துவ முகாம் இன்று 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை இலங்கை வங்கி சாவகச்சேரி கிளையில் இடம்பெறும்.

இம் மருத்துவ முகாமில் FBS/RBS/PPBS பரிசோதனைகள் மற்றும் BMI பரிசோதனைகள், ஆகியவற்றுடன் பொதுவான வைத்திய ஆலோசனைகள், நீரிழிவு சம்பந்தமான ஆலோசனைகள் என்பனவும் வழங்கப்படும். (5)

# இராசி பலன்

**மீனம்:** எதையும் பலமுறை யோசித்து செய்வது நல்லது, திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், பொறுப்புக்கள் அதிகரிக்கும் நாள்.

**மேடம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலொங்கும் நாள், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.

**இடபம்:** உள்ளம் மகிழும் அளவில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்துசேரலாம், கௌரவமான நாள்.

**மிதுனம்:** வியாபார விருத்தியுண்டு, உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், உறவினர்கள் வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** தொலைபேசி வழித்தகவல் மனக்குழப்பத்தை அகற்றும், தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, உறவினர்களிடையே ஏற்பட்ட மனக்கசப்புக்கள் அகலும்.

**கடகம்:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள்.

**மகரம்:** நண்பர்கள் சந்திப்பில் மகிழ்ச்சி கூடும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், செய் தொழில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** உறவினர்களும், நண்பர்களும் வலிந்து வந்து உதவுவார்கள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், கௌரவம், அந்தஸ்து என்பன உயரும் நாள், முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**இராசி பலன் — கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | இராசி பலன் | | சூரி, சுக், செவ், புத |
| | கிரகநிலை | | |
| சனி, கேது | குரு | சந் | |

சந்திராஷ்டமம்
அச்சுவினி

**08.08.2019**

ஆடி 23, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 5.56மணிக்கு
அட்டமி பிற்பகல் 4.01 மணிவரை
விசாகம் பின்னிரவு 3.02 மணிவரை
சுபநேரம் 7.34-9.04 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை
அட்டமி-நவமி

வளவன்

**தனுசு:** விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்,காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் சிறு தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** கொள்கைப்பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பக்குவமாய்ப் பேசிக் காரியம் சாதிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு,போசன நன்மையுண்டு.

### எம்.பிக்களுக்கு 2 இலட்சம் ரூபா மேலதிக கொடுப்பனவு

## அமைச்சரவைப் பத்திரத்தைப் புறக்கணித்தது ஏன்?

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை மேலும் 2 இலட்சம் ரூபாவால் அதிகரிப்பதற்குக் கோரி முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தில் தான் கையொப்பம் இடவில்லையெனவும் அதனைத் தான் புறக்கணித்ததாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பி.எம்.ஐ.சி.எச். இல் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் ஜனாதிபதி இதனைக் கூறினார்.



பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட ஒருவர் அனுபவிக்கும் சலுகைகளும், வரப்பிரசாதங்களும் தேவைக்கும் அதிகமாகவுள்ள நிலையில் மேலும் கொடுப்பனவை அதிகரிப்பது நியாயமற்றது என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அமைச்சரவையில் இது குறித்து என்னுடன் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. எனக்கு அழுத்தங்களும் வந்தன. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு மாதாந்தம் 4 இலட்சம் ரூபாய் கிடைக்கப்பெறுகின்றது. இதற்கும் மேலதிகமாக 2 இலட்சம் ரூபாய் கொடுப்பதை நான் அனுமதிக்க முடியாது எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

## "போதைப்பொருள் வழங்கினால் மாத்திரமே தாய்ப்பாலூட்டுவேன்"

### பொலிஸ் நிலையத்தில் அடம்பிடித்த பெண்

(மின்னேரியா)

போதைப்பொருள் வழங்கினால் மாத்திரமே, தனது குழந்தைக்கு தாய்ப் பாலூட்டுவேன் எனத் தாயொருவர் அடம்பிடித்த சம்பவம் மின்னேரியா பொலிஸ் நிலையத்தில் பதிவாகியுள்ளது.

மின்னேரியா, பட்டபிலிகந்த பிரதேசத்தில் வீடொன்றுக்குள் போதைப் பொருளை பயன்படுத்திய நிலையில், பெண்ணொருவரும் ஆண்கள் இருவரும் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

இதனையடுத்து சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் குறித்த பெண்ணின் ஒரு வயதுக் குழந்தை நேற்று முன்தினம் காலை தாயிடம் பால் கேட்டு அழுத போது, த்னக்கு போதைப் பொருள் வழங்கும் வரை குழந்தைக்குப் பாலூட்ட மாட்டேன் எனப் பொலிஸாரிடம் தெரிவித்தார். இதனையடுத்து குழந்தைக்குப் பால்மாவை வழங்க பெண் பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். (இ-7)

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடள் நடத்தும் தெய்வீக இசையரங்கின் மூன்றாம் நாள் நிகழ்வு இன்று 8 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும். இதில் பாட்டு-கேஷவி லைபகரன், யஷ்வினி லைபகரன், கோடிஷா லைபகரன், வைசாலினி தேவராஜன், வயலின்-லெ.யமுனா ஜெயந்தி,வே.வேலதீபன், மிருதங்கம்-க.இசைநிலவன், சு.கமலதாஸ் ஆகியோர் பங்கு பெறுவர். (இ-7)

## இலங்கை ஒரு நண்பரை இழந்துவிட்டது சுஷ்மாவின் மறைவுக்கு மங்கள இரங்கல்




(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜின் மறைவுக்கு பல தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய இந்தியா ஒரு தலைவரை இழந்துவிட்டது. இலங்கை ஒரு நண்பரை இழந்துவிட்டதென நிதி அமைச்சர் மங்கள சமரவீர இரங்கல் தெரிவித்துள்ளார்.

மேலும் அவரின் மறைவு அதிர்ச் சியையும் கவலையையும் தருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் நேற்றுப் புதன்கிழமை தனது டுவிட்டர் பக்கத்திலேயே இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

முன்னாள் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் திடீர் உடல் நலக் குறைவு காரணமாக நேற்று முன் தினம் இரவு காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

கொக்குவில் -நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்
வரலஷ்மி விரதம்-காப்புக்கட்டல்



09.08.2019 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகி விசேட பூசைகளைத் தொடர்ந்து வரலஷ்மி காப்புக் கட்டல் இடம்பெறும். வரலஷ்மி காப்புக் கட்ட விரும்புவர்கள் தமது பதிவுகளை முற்கூட்டியே ஆலயத்தில் மேற்கொள்ளலாம்.

(9824)

ஆலய பரிபாலனசபையினர்.

## நீச்சல் தடாகத்தை திறக்க நிதியமைச்சர் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் நிர்மா ணிக்கப்பட்ட குமார் ஆனந்தன் நீச்சல் தடாகத்தை நாளை 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நிதிய மைச்சர் மங்கள சமரவீர திறந்து வைப்பார்.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமத்திரன், மாவை.சேனாதிராசா ஆகி யோரும் கலந்து கொள்வர். (இ)

சேவை நலன் பாராட்டு

திருமதி. பரமேஸ்வரி சுந்தரலிங்கம்

(இலங்கை ஆசிரியர் சேவை -தரம் 1,விசேட பயிற்சி -விவசாயம்)

03.09.1979-07.08.2019 வரை



சேவை விபரம்:
யா/ நயினாதீவு நாகபூஷணி வித்தியாசாலை
03.09.1979-31.12.1982
பலாலி ஆசிரியர் கலாசாலை
01.01.1983-31.12.1984
கிளி/ கனகாம்பிகைக்குளம் கனிஷ்ட வித்தியாலயம்
01.01.1985-14.06.1990
யா/ சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி. வேலணை
15.06.1990-14.12.1990
யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயம்
15.12.1990-17.09.1996
யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாசாலை (பகுதி நேரம்)
05.02.2001-07.08.2019
யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை
18.09.1996-07.08.2019

Congratulations

எண் ஐந்து வருடங்கள் அரச பணி என்பதுவே
அளப்பரிய சாதனை தான் அம்மணியே!
பண்பிலே உயர்ந்தவளே பரமேஸ்வரியே நின்
பணியதனில் பள்ளிகள் இரண்டு பயனடைய
அயராது உழைத்த உத்தமியே தங்கள் ஓய்வுக்காலம்
சிறக்க வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.

பழைமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற
- பில்லி சூனியங்கள் அகற்ற வேண்டுமா?

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்
(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153, 076 841 1848

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

# சுட்டும் முகநூல்

06

**Parisuthan Sivarasa**
21 hrs

எத்தனையோ நெருக்கடியான காலகட்டங்களிலும் உயிராபத்துள்ள நேரங்களிலும் ஊரடங்கு வேளைகளிலும் கூட இவ்வாறான கெடுபிடிகளற்று நல்லூரானை தரிசித்த நமக்கு நல்லூர் செல்லும் வீதியெங்கும் சோதனை சாவடிகளமைத்து பொலிஸாரின் சோதனைகளின் பின்பே முருகப் பெருமானை சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை! ஒரு ஈஸ்டர் தாக்குதல் நம் அன்றாட வாழ்வில் எவ்வளவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. மாலை நேரம் வேலை முடிந்து ஓடோடி வீடு சென்று குளித்தும் பாதி குளிக்காதது பாதியாக வேட்டியணிந்து ஓடோடி வந்து நல்லூரானுடன் வெளி வீசியாச்சும் சுத்த முடிஞ்சுதே என்று திருப்தியடையும் ஆயிரக்கணக்கானோரும் இதை எவ்வாறு எடுத்துக்கொள்ளப் போகின்றார்கள் என்பதை நினைக்கும் போது தான் சஹ்ரான் மீதும் இந்த தாக்குதல் மீதும் அளவு கடந்த கோபம் பொங்கியெழுகிறது!



**Rajeevan Jeyachandramoorthy**
Yesterday at 12:12 AM

மகிந்த, ரணில், மைத்திரி, சந்திரிகா தொடர்பில்லாத அல்லது இவர்களின் செல்வாக்கை புறமொதுக்கி புதிய ஒருவர் நாட்டின் தலைவராக வர வேண்டும்.

**Dominic Premananth**
22 hrs

ஆளுநருக்கே அதிகாரம்! முதலமைச்சருக்கு அல்ல!! மாகாண சபையின் அதிகாரம் இதுதான்!!!

**சகாதேவன் நித்தியானந்தன்**
Yesterday at 6:32 AM

கவுண்டமணி ஒரு படத்தில் தேங்காயில் பொம்ப் வைத்திருப்பதாக காமடி செய்வார் நல்லூருக்கு தேங்காய் கொண்டு போகலாமா?



**காவலூர் அகிலன்.**
48 mins

தமிழர்கள் தமக்கான அரசியல் தலைவர்களை சரியான முறையில் தேர்ந் தெடுக்கத் தவறி விடுகிறார்கள் அதனாலே தான் அவர் களுக்குரிய நிரந்தரத் தீர்வு எட்டப்படாமலே போகிறது...

அன்பு வாசகர்களே! சுட்டும் முகநூல் என்ற புதியதொரு களம் உங்கள் கருத்துக்களைத் தாங்கி வெளிவருகிறது. முகநூல்களில் நீங்கள் இரசித்து பார்த்த அல்லது உங்கள் முகநூல் பக்கத்தில் நீங்கள் முன்வைத்த ஆழமான-யதார்த்தமான கருத்துக்கள் இவ்விடத்தில் பதிவிடப்படும். இதற்கு உதவியாக முகநூலில் வெளிவரும் அறிவார்ந்த கருத்துக்களை www.facebook.com/valampurii எனும் தளத்தில் உள்பெட்டி (Messenger) ஊடாக அனுப்பி வைக்கலாம்.

# ஜனாதிபதி மைத்திரி கம்போடியாவுக்குப் பயணம்












(கம்போடியா)

இலங்கைக்கும் கம்போடியா வுக்குமிடையில் இருந்துவரும் நீண்டகால உறவுகளை புதிய துறைகளுக்கு விரிவுபடுத்தி பரஸ் பர நன்மைகளை மேலும் அதி கரிக்கும் நோக்குடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கம் போடியாவுக்கு நான்கு நாள் அரச முறைப் பயணம் ஒன்றை மேற் கொண்டார்.

கம்போடிய அரசாங்கத்தின் விசேட அழைப்பின்பேரில் கம் போடியாவிற்கு பயணமான ஜனா திபதி நேற்று முற்பகல் **Phnom Penh** சர்வதேச விமான நிலை யத்தை சென்றடைந்தார். ஜனாதி பதியை கம்போடியா நாட்டின் பிரதிப் பிரதமர் மற்றும் அந்நாட் டின் தகவல்துறை அமைச்சர் **Khieu Kanharith** உள்ளிட்ட அந்நாட்டின் உயர்மட்டப் பிரதி நிதிகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

தனது இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி கம்போடியா நாட்டின் மன்னாரை சந்திக்க வுள்ளதுடன், கம்போடியாவின் பிரதமர் உள்ளிட்ட அந்நாட்டின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை யும் மேற்கொள்ளவுள்ளார்.

இருநாடுகளுக்கிடையிலான பொருளாதார, வர்த்தக, சுற்றுலா மற்றும் பௌத்த சமய தொடர்புகளை விரிவுபடுத்துவது பற்றி இதன் போது விசேட கவனம் செலுத்தப் படவுள்ளதுடன், இவை தொடர் பான புதிய உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படவுள்ளன. (இ-7)

# தமிழ்மொழி தெரியாதவர்களே வடக்கில் மின்மானி வாசிக்கின்றனர்

## டக்ளஸ் எம்.பி.சுட்டிக்காட்டு



(கொழும்பு)

தமிழ்மொழியைக் கற்றுக் கொள்ளாததற்காக தான் வருத்தப்படுவதாக அண்மையிலே யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமர் தெரிவித்திருந்ததாக ஊடகங்களிலே செய்திகள் வெளிவந்திருந்தன. இன்று தமிழ்மொழியே தெரியாதவர்கள் வடக்கு மாகாணத்திலே மின்மானி வாசிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்கள் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்தார்.

இலங்கை மின்சார திருத்தச் சட்டமூலம் தொடர்பிலான நாடாளுமன்ற விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இத்தகைய ஏற்பாடுகள் காரணமாக எமது மக்களும், அந்தப் பணியாளர்களும் பல்வேறு இடையூறுகளையே நாளாந்தம் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது எங்கே போகிறீர்கள்? எனக் கேட்டால், கூடையிலே தேங்காய்! என்று பதில் சொல்லுகின்ற நிலை இன்று தோன்றியிருக்கின்றது.

வடக்கு மாகாணத்திலே தொழில் வாய்ப்புக்கள் இல்லாமல் இருப்பவர்கள் இல்லாமல் இல்லை. தொழில் வாய்ப்புக்களின்றி மிக அதிகமானோர் இருக்கின்ற நிலையிலேயே இத்தகைய பதவிகள் வடக்கு மாகாணம் தவிர்ந்தவர்களைக் கொண்டு நிரப்பப்பட்டு வருகின்றன.

வடக்கிலே இருக்கின்ற தொழில் வாய்ப்புக்களுக்கு அங்குள்ளவர்களை நியமிக்காமைக்கு, அந்தந்த தொழில் வாய்ப்புக்களை எமது மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்வராத காசுபெரலிய தமிழ்த்தரப்பு அரசியல்வாதிகளே காரணமாக இருந்தாலும், அமைச்சுப் பொறுப்புக்களில் இருக்கின்றவர்களாவது எமது மக்கள் தொடர்பிலும் சற்று அக்கறை எடுத்து, எமது மக்களுக்கும் போதிய தொழில்வாய்ப்புக்களைக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும் என்ற விடயத்தையே இங்கு மீண்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகின்றேன்.

கையால் ஆகாத இந்த பணப்பெட்டி அரசியல்வாதிகளால் எமது மக்கள் கைலாசம் கூட போக இயலாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதனை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

இதேவேளை அண்மையிலே கொழும்பு-வடக்கு பாடசாலை மாணவ, மாணவியர் சிலரை மின்சக்தி அமைச்சர் சந்தித்த போது, கல்வியின் முக்கியத்துவம் குறித்து அந்த மாணவ, மாணவியரிடையே எடுத்துக் கூறியிருந்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்திருந்தன.

இந்த நாட்டிலே கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலைக்கு வடக்கு மாகாணம் தள்ளப்பட்டு இருப்பது உங்களுக்குத் தெரியும். பாலர் பாடசாலை பிள்ளைகளைவிட ஆற்றல்கள் இல்லாத நிலையில், கல்வி உட்பட அனைத்துத் துறைகளும் வடக்கிலே பின்தள்ளப்பட்டு போய்விட்டன.

எமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு இந்த மின்சாரம் ஒரு பெருந் தடையாக இருந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அதாவது, வடக்கிலே எமது மக்களின் காணி நிலங்களை அரச திணைக்களங்கள் பல போட்டிபோட்டுக் கொண்டு அபகரித்து வருவதைப் போல், எமது பிள்ளைகளின் கல்வியை இந்த மின்சாரசபை அபகரிப்பதாகவே எமது மக்கள் கருதுகின்ற நிலை உருவாகியிருக்கின்றது.

கடந்த ஜூலை மாதத்து யாழ்ப்பாணப் பத்திரிகைகளை எடுத்துப் பார்த்தால், ஒவ்வொரு பகுதிகளுக்கென தொடர்ந்தும் பல்வேறு பழுதுபார்த்தல்கள் காரணமாக மின்சாரத் தடைகள் பற்றிய அறிவிப்புக்களையே காணக்கூடியதாக இருந்தது. இந்த மாதம் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில்கள் பரீட்சை மற்றும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை என்பன நடைபெறுகின்ற நிலையில், அந்த மாணவர்கள் இந்தப் பரீட்சைகளுக்கு மிகஅவதானமாக தயாராக வேண்டிய காலகட்டத்தில்தான் வடக்கு மாகாணத்திலே மின்சாரத்தடைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய செயற்பாடுகள் தொடர்ந்து ஏற்பட்டு வருவதால்தான் எமது மக்களிடையே எமது பிள்ளைகளின் கல்வியை இந்த மின்சார சபை அபகரிக்கின்றதோ? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

எமது பகுதியிலே இத்தகைய பிரச்சினைகள் தொடர்பில் வடக்கிலே கொத்துரொட்டி அரசியல் செய்கின்றவர்கள் எதுவுமே கதைப்பதில்லை. அரசாங்கத்தின் பணமும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற எமது உறவுகளின் பணமும் சலுகைகளும் கிடைத்தால்போதும், கம்பரெலியுவுடன் கம்மென்று கிடந்து விடுவார்கள்.

எனவே, மின்சக்தி அமைச்சரே! தானாக முன்வந்து இந்த விடயம் தொடர்பில் நிலையானதொரு ஏற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும் என எமது மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வசீம் தாஜுடீன் கொலை

# சட்ட வைத்திய அதிகாரிக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை

(கொழும்பு)

வசீம் தாஜுடீன் படுகொலை வழக்கின் முக்கிய சாட்சியங்களை மறைத்ததாக கொழும்பு முன்னாள் பிரதம சட்ட வைத்திய அதிகாரி, பேராசிரியர் ஆனந்த சமரசேகரவுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

நேற்றுப் புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குறித்த குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.(இ-7)

# குறை'களை' பதிகம் 78

## வேராய் நாமிருக்க விழுதாய் வாடா முருகா



பிட்டுக்கு மண் சுமந்த
பெருமானின் மகனாகி
தந்தைக்கே உபதேசம்
செய்திட்ட முருகோனே

நாரதர் கொணர்ந்த கனிவேண்டி
மயில்மீதேறி உலகைச்சுற்றிவந்து
கனி கிடைக்கா சோகத்தில்
ஆண்டியாய் மலை சென்ற மருகோனே

நல்லை வீதியில் உன் நாமம் பாடிவர
நமக்கென்ன தடையுண்டு...
உண்டு கந்தா உண்டு
உன் திருவடியை நாடிவருவோர்க்கு
பொடி செக்கிங் உண்டு கந்தா உண்டு

உன் பாதங்களுக்காய்
தவங்கிடந்து பூத்த பூக்களுக்கு
ஸ்பரிச சோதனையும் உண்டு குமரா

உன்னை வேண்டி உறங்கச் சென்று
உன்னை நினைத்து உறங்கி எழுந்து
நன்னீரிலே தலைக்குக் குளித்து
விரதமிருந்து உனைக்காண ஓடோடிவந்து
வரிசையில் நிற்பதுதான் முறையோ கந்தா!

உன் மலர்ப்பாதம் தொட்ட
திருவீதிதனில் தவம்கிடக்கும் பக்தர் மத்தியில்
கருங்கால்கள் பட்டிடலாமோடா!

தந்தைக்கு உபதேசம் செய்த அழகா
தரணியை ஆண்டிடும் தமிழ்க்கடவுளே
எம்முப்பாட்டனே முருகா
நித்தம் உன் முற்றம் வர
நீதான் அருள் புரியவேண்டுமடா

சோதனை தீர்த்திடும் குமரக்கோனே
சோதனையோ எமக்கு
உன் திருவடிகளைக் காண...

தீர்த்திடடா எம் சோதனையையும்
எமக்கான சோதனையையும்
தேகம் சிலிர்த்து உன் திருவடிகளை
வேராய்த் தொடரும் தமிழர்க்கு
விழுதாய் வந்து வரம்கொடடா வேலா

மாவை. நா.கஜேந்திரன்

அன்பு வாசகர்களே!
இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.திரு.
மாணிக்கம் சண்முகராஜா
(வில்லுத்தகடு இராஜன்,
இராஜன் மினிபஸ் உரிமையாளர்)

தோற்றம் 24.05.1955
மறைவு 08.08.2015

திதி: 08.08.2019

உலக வாழ்வு
நிலையில்லாதது
என்பதை யாமறிவோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

(9798)

82/17, 3 ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# 900 நாட்களை எட்டிய காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம்

## வவுனியாவில் ஆர்ப்பாட்டப் பேரணி




(நெளுக்குளம்)

வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக சுழற்சிமுறை உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று நேற்று முன்னெடுக்கபட்டது.

அவர்களால் மேற்கொள்ளப் பட்டுவரும் சுழற்சிமுறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்றுடன் 900 நாட்களை எட்டியுள்ளமையை முன்னிட்டே குறித்த ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

போராட்டம் மேற்கொள்ளும் இடத்திலிருந்து கண்டிவீதி வழியாக பேரணியாகச் சென்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மணிக்கூட்டு கோபுரச் சந்தியை அடைந்து அங்கிருந்து கடைவீதி வழியாக தொடர் போராட்டம் மேற்கொள்ளும் இடத்தைச் சென்றடைந்தன்ர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், தமிழர்கள் 1976 இல் சிங்கள அரசாங்கத்தில் நம்பிக்கையிழந்தார்கள், 2015 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நம்பிக்கை இழந்தனர். இப்போது தமிழர்களிற்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளை பெற்றுக் கொள்ளக் கூடிய புதிய தலைமையே தேவை என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பதாகையை ஏந்தியிருந்ததுடன், அமெரிக்க- ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளையும் கைகளில் ஏந்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை தமக்கான தீர்வை வழங்கக் கூட்டமைப்பு தடையாகவுள்ளதாகவும் தெரிவித்தனர். குறித்த ஆர்ப்பாட்டத்தில் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவை சேர்ந்தவர்களும் கலந்து கொண்டிருந்தனர். (9-299)



# குடிநீருக்கு அலையும் மாயவனூர் கிராம மக்கள்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாயவனூர் கிராமத்தில் நிலவும் கடுமையான வரட்சி காரணமாக இப் பகுதியில் வாழும் மக்கள் தமக்கான குடிநீரைப் பெறுவதில் சொல்லொணாத்துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்திற்குட்பட்ட மாயவனூர் கிராமத்தில் நிலவும் கடுமையான வரட்சி காரணமாக குறித்த கிராமத்தில் குடிநீர் நெருக்கடி காணப்படுகின்றது.

மேற்படி கிராமத்தில் காணப்படும் மிக ஆழமான கிணறுகளில் நீரின்றிக் காணப்படுவதுடன், குறிப்பிட்ட ஒரு சில பொதுக் கிணறுகளில் மாத்திரம் தண்ணீர இருப்பதாகவும் மிக நீண்ட தூரம் சென்றே தமக்கான தண்ணீரைப் பெறவேண்டியுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குடிநீருக்கு நீண்ட தூரம் அலைய வேண்டிய நிலையில் ஏனைய தேவைகளுக்கான தண்ணீருக்கு புழுதியாறு குளத்திற்கே செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே தமக்கான குடிநீர் வசதிகளை விரைவாக ஏற்படுத்தித் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

# ரணில் ஏமாற்றுவார்

## சிவமோகன் எம்.பி.தெரிவிப்பு



(குருமன்காடு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை. இருப்பினும் என்னைப் பொறுத்தவரை அமைச்சர் சஜித் பிரேமதாஸ மற்றவர்களை விட ஏற்கக் கூடியவர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்படி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை. யாரை இவர்கள் வேட்பாளராக நிறுத்த இருக்கிறார்களோ அதன் பின் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாரை ஆதரிப்பது என்ற முடிவை எடுக்கும்.

இதுவரை மாறி மாறி ஆட்சிக்கு வந்த அனைவரும் பேயும், பிசாசுமாக இருந்திருக்கிறார்கள். மைத்திரி கூட எங்களை ஏமாற்றி விட்டார். நூறு வீதம் தமிழ் மக்களின் வாக்கால் வந்த ஒருவர், நாங்கள் அவரது வெற்றிக்காக உழைத்த போதும் எம்மை ஏமாற்றி விட்டார். இது தான் உண்மை. மைத்திரி மட்டுமல்ல 1948 ஆம் ஆண்டு முதல் வந்த தலைவர்கள் எல்லாம் தமிழ்த் தலைமைகளை ஏமாற்றியுள்ளனர்.

வரப்போகும் ஜனாதிபதி தேர்தலில் நாங்கள் யாரோ ஒரு பேரினவாதக் கட்சியை ஆதரிப்பவர்களாக தான் இருப்போம். அதற்காக அந்தக் கட்சியின் பின் சென்றவர்களாக கருத முடியாது. எமக்கான ஒருவரை வேட்பாளராக நிறுத்தாதவரை நாம் யாரோ ஒரு கட்சியை ஆதரிக்க தான் வேண்டும். நிச்சயமாக தேர்தலை நிராகரிக்க முடியாது. ஆகவே, போட்டியிடும் இருவரில் யாரை ஆதரிப்பது என்பதே தெரிவாக இருக்கும். மற்றது அல்ல. என்னைப் பொறுத்த வரை மகிந்த ராஜபக்ஷவால் தமிழ் மக்கள் பட்ட துன்பம் போதும். அவருக்கு ஆதரவு வழங்க முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்னர் தனது முடிவை அறிவிக்கும்.

மகிந்த ராஜபக்ஷ காலத்தில் 23 ஊடகவியலாளர் காணாமல் போக செய்யப்பட்டுள்ளார்கள். 40 ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். இந்த நிலை நீடிக்க வேண்டுமா? அதை ஏற்க முடியாது. திடகாத்திரமான, முடிவெடுக்க கூடிய ஒருவர் வரவேண்டும் என்பது எதிர்பார்ப்பு. ரணிலோ அல்லது மற்றவரோ தரலாம் என கூறி ஏமாற்றுவார்கள். ஆனால் சஜித் அப்படியானவர் அல்ல. சொன்னால் செய்யக் கூடியவர் என மேலும் தெரிவித்தார். (9-250)

# மன்.பொது வைத்தியசாலையில் மருந்துவகை பற்றாக்குறை; தரமற்ற மருந்துகள் அனுப்பி வைக்கப்படுவதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு



(மன்னார்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அண்மைக்காலமாக முக்கியமான பல்வேறு சிகிச்சைகளுக்கான மருந்துகள் பற்றாக்குறையால் நோயாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் பெரும்பாலும் தரமற்ற மருந்துகள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் மன்னார் மாவட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்க மன்னார் கிளை செயலாளர் கசுன்சாமர தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்க கிளையின் ஏற்பாட்டில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே மேற்படி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த பல வருடங்களாக நாடளாவிய ரீதியில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் காணப்பட்ட போதிலும் அண்மைக்காலமாக அதிகளவிலான தட்டுப்பாடு நிலவுகின்றது. குறிப்பாக இருதய நோய் சார்ந்த மருந்துகள், சிறுவர்களுக்கான மருந்துகள், கர்ப்பிணி பெண்களுக்கு வழங்க வேண்டிய மருந்துகள், உயர் இரத்த அழுத்தம், கண் நோய்களுக்கான மருந்து, நோய் எதிர்ப்பு மருந்து என 33 இற்கு மேற்பட்ட முக்கிய மருந்து வகை பற்றாக்குறை தொடர்ச்சியாகக் காணப்படுகிறது.

குறித்த மருந்துகளின் தேவை தொடர்பாக உரிய திணைக்களங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட போதிலும் எந்தவித பதில்களும் கிடைக்கவில்லை. அத்துடன் தொடர்ச்சியாக தரமற்ற மருந்துகள் மன்னார் வைத்திய சாலைக்கு அனுப்பி ஸ்வைக்கப்படுகிறது. குறித்த மருந்துகளை மாவட்ட ரீதியில் பரிசோதித்து நாம் பயன்படுத்துவதை தவிர்த்து வருகிறோம்.

மேலும் மருத்துவப் பொருட்களுக்கான பற்றாக்குறைக்கு காலாவதித் திகதி அண்மையில் உள்ள மருந்துகள் அனுப்பி வைக்கப்படுவது ஒரு காரணமாக அமைகிறது. தொடர்ச்சியாக இவ்வாறு இடம்பெற்று வருவதால் மிக அத்தியாவசியமான மருந்துப் பொருட்களின் பற்றாக்குறை காரணமாக மக்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

சுகாதார அமைச்சு மற்றும் சுகாதாரத் திணைக்களம் மிக விரைவில் குறித்த பிரச்சினை தொடர்பாக கவனம் செலுத்தி உரிய தீர்வைப் பெற்றுத்தரா விட்டால் விரைவில் மிகப் பெரிய போராட்டம் ஒன்றை நடத்த வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப் படவேண்டிய சூழ்நிலை உருவாகும் என மேலும் தெரிவித்துள்ளார். (9-285)

# ஒட்டுசுட்டான் அம்பகாமம் பகுதியில் மணல் ஏற்றியவர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச்சூடு



(பனிக்கன்குளம்)

**முல்லைத்தீவு (ஒட்டுசுட்டான்) அம்பகாமம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றியவர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதுடன் தாக்குதலையும் மேற்கொண்டுள்ளனர்.**

குறித்த பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வை கண்காணிப்பதற்காக படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அப்போது அங்கு சிலர் மணல் ஏற்றிக் கொண்டு இருந்துள்ளனர்.

அவர்கள் அருகில் இராணுவத்தினர் நெருங்க முற்பட்ட வேளை அங்கு மணல் ஏற்றிக் கொண்டு நின்றவர்கள் தப்பியோட முயற்சித்துள்ளனர். அப்போது இராணுவத்தினர்அவர்களை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

அப்போது ஏனையவர்கள் தப்பிச் செல்ல வாகன சாரதியை சிறைபிடித்த இராணுவத்தினர் அவரை சரமாரியாக தாக்கியுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டு சத்தத்தை கேட்டு அப்பகுதியில் ஒன்றுகூடிய பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். அவ்விடத்துக்கு வந்த பொலிஸாரையும் இராணுவத்தினரையும் அழைத்த மக்கள் துப்பாக்கிச்சூடு நடத்திய இராணுவத்தினரை கைதுசெய்யுமாறு கோரி அதிகாலை 3.30 மணிவரை மாங்குளம் பொலிஸ் நிலைய வாசலில் மக்கள் முற்றுகையிட்டிருந்தனர். பின்னர் இராணுவத்தினரை கைது செய்வதாக பொலிஸார் வழங்கிய வாக்குறுதியை அடுத்து அவ்விடத்தில் இருந்து கலைந்து சென்றனர்.

நேற்று சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற பொலிஸார் 15 இற்கும் அதிகமான துப்பாக்கி ரவைகளை மீட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (9-281)

# கிளி.கோணாவில் பிரதேசத்தில் பாடசாலையில் இருந்து இடை விலகும் மாணவர்கள் தொகை அதிகரிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கோணாவில் பிரதேசத்தில் பாடசாலைக் கல்வியை விட்டு இடை விலகிய அல்லது ஒழுங்கற்ற வரவுகளைக் கொண்ட மாணவர்களின் தொகை அதிகளவில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தின் சுமார் ஆயிரத்து 88 குடும்பங்களைச் சேர்ந்த நான்காயிரத்து 336 பேர் வசித்து வருகின்ற ஓர் பிரதேசமாகக் காணப்படுகின்ற கோணாவில் பிரதேசத்தில் வாழும் குடும்பங்களில் அதிகளவான குடும்பங்கள் தொழில் வாய்ப்பின்றி வறிய குடும்பங்களாக காணப்படுகின்றன.

குறிப்பாக, இந்தப்பிரதேசத்தில் வாழும் அதிகளவான குடும்பங்கள் அக்கராயன் குளத்தின் கீழான விவசாயப் பயிர்ச் செய்கைகளின் போது தொழில் வாய்ப்புக்களைப் பெறுகின்ற குடும்பங்களாக காணப்படுகின்றன.

இதைவிட விவசாயத்தை நம்பி வாழும் குடும்பங்கள் தற்போதைய வரட்சி காரணமாக தொழில் வர்ய்ப்புக்கள் அற்றுப் போயுள்ளன.

கோணாவில் யூனியன்குளம், புதிய குடியிருப்பு போன்ற பகுதிகளில் வாழ்கின்ற அநேகமான குடும்பங்கள் தொழில் வாய்ப்பின்றி காணப்படுகின்றன. இவ்வாறான பிரதேசங்களில் நுண்நிதிக்கடன்களைப் பெற்று அவற்றை மீளச்செலுத்த முடியாமல் பெருமளவான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், குடும்ப வன்முறைகள், மற்றும் முரண்பாடுகள் காரணமாகவும் பிரிந்து வாழும் குடும்பங்களும் யுத்தத்தினால் கணவனை இழந்த காணாமல் போன பெண் தலைமைத்துவக்குடும்பங்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

இவ்வாறான வறுமை நிலை காரணமாக இப்பிரதேசங்களில் இருக்கின்ற பாடசாலைக்கல்வியைத்தொடர வேண்டிய வயதிலுள்ள கூடுதலான சிறார்கள் பாடசாலைகளுக்குச்செல்லாத நிலை காணப்படுவதுடன், இச்சூழலில் உள்ள பாடசாலைகளான அக்கராயன் மகாவித்தியாலயம், கோணாவில் மகாவித்தியாலயம், யூனியன்குளம் பாடசாலை, கோணாவில் ஆரம்பப்பாடசாலை போன்ற பாடசாலைகளில் கணிசமான மாணவர்கள் ஒழுங்கற்ற வரவுகளைக்கொண்ட மாணவர்களாகவும் காணப்படுகின்றனர்.


இப்பகுதிகளில் காணப்படுகின்ற இவ்வாறான சிறார்களை பாடசாலைகளில் மீளக்கற்றலில் இணைக்க முயற்சிக்கின்ற போதும் அந்தக் குடும்பங்களினுடைய வறுமை நிலை தொடர்பில் எவரும் கவனம் செலுத்துவதில்லை என்றும் பல்வேறு தரப்புக்களும் சுட்டிக்காட்டியுள்ளன. (9-315)

## ஒதியமலை பாடசாலைக்கு உள்ளூர் ஆசிரியர்களை நியமிக்கக் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒதியமலை அ.த.க. பாடசாலைக்கு பிற மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களை நியமிக்காமல் மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களை நியமிக்கும்படி பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஒதியமலைக் கிராமத்திற்கு பேருந்து சேவைகள் இடம்பெறுவதில்லை. பாடசாலையில் விடுதி இல்லை. இதன் காரணமாக பிற மாவட்டங்களில் இருந்து பணிக்கு வரும் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். போக்குவரத்து வசதி உள்ள இடங்களுக்கு பிற மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களை பணிக்கு இணைத்து விட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூரில் வாழ்கின்ற ஒதியமலைக் கிராமத்திற்கு வந்து செல்லக் கூடிய ஆசிரியர்களை நியமிப்பதற்கு துணுக்காய் வலயக் கல்விப் பணிமனை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த துணுக்காய் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சஞ்சீவன், துணுக்காய் கல்வி வலயத்தில் அறுபது பாடசாலைகள் இயங்குகின்றன. பதினைந்து பாடசாலைகளில் ஆசிரிய விடுதிகள் இல்லை

ஆசிரிய விடுதிகளை அமைப்பதன் மூலம் ஆசிரியர்கள் தங்கி நின்று கற்பிக்கக் கூடிய சூழல் உருவாகும் எனவும் தெரிவித்தார். (9-350)



**வன்னிப் பெருநிலப் பரப்பில் ஏ-9 வீதி புளியங்குளம் முத்துமாரியம்மன் ஆலயத்தின் 45 ஆம் வருட மஹோற்சவ விஞ்ஞாபனம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த் திருவிழா, 15 ஆம் திகதி தீர்த்தத்திருவிழா, 16 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவிருப்பதாக புளியங்குளம் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (படங்கள்:-நெளுக்குளம் செய்தியாளர்)**

# ஆலயத் திருவிழாவில் சமூக ரீதியாக புறக்கணிக்கப்படுவதாக மன்.சவரிகுளம் கிராம மக்கள் அரச அதிபருக்கு மகஜர்




(மன்னார்)

**மாந்தை மேற்கு பிரதேச பிரிவிற்குறப்பட்ட கோவில் குளம் நொங்கு வெட்டி ஐயனார் ஆலயத்தில் சமூக ரீதியாக தாம் புறக்கணிக்கப்படுவதாக சவரிகுளம் பகுதியில் வசிக்கும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

இவ்விடயம் தொடர்பாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குறப்பட்ட சவரிகுளம் கிராமத்தில் வசித்து வரும் மக்கள் கையொப்பமிட்டு மன்னார் மாவட்ட அரச அதிபருக்கு நேற்று முன்தினம் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

குறித்த மகஜரில் மேலும் குறிப்பிடுகையில்.

கோவில் குளம் நொங்கு வெட்டி ஐயனார் ஆலயத்தில் கடந்த பல வருடங்களாக நடைமுறையில் இருந்த வழமைகள் மாற்றப்பட்டு கடந்த வருடத்தில் இருந்து சவரிகுளம் பகுதியில் வசிக்கும் எம்மை சமூக ரீதியாக அடக்கி ஒடுக்க முற்படுகின்றனர்.

வருடாந்த பொங்கல் நிகழ்வு இம் மாதம் நடைபெறவுள்ள நிலையில் "பட்டோலை" அங்கத்தவர்கள் மட்டுமே ஆலய பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், அதே பகுதியில் உள்ள எம்மை எவ்விதமான ஆலய வேலைகளிலும் ஈடுபடக் கூடாது என்றும் தீர்மானித்துள்ளதாக நாம் அறிகின்றோம்.

எனவே கடந்த வருடமும் நேர்த்திக்காக காவடி எடுத்த எமக்கு பல்வேறு விதமான நெருக்கடி கொடுத்ததுடன் சாதிய ரீதியாக வகைப்படுத்தினார்கள்.

அன்னதான மடத்திலும் உணவு பரிமாறக் கூடாது என எம்மை புறக்கணிக்கின்றனர். எனவே இவ்வாலயம் இந்து கலாசார திணைக்கள த்தில் பதிவு செய்யப்பட்ட ஆலயம் ஆகும். இவ்வாறான பொதுக் கோவிலில் ஒரு பிரிவினர் மட்டும் உரிமை கோருவது நியாயமா?

ஆலயம் என்பது மனிதர்களுக்குச் சொந்தமானது. அங்கே மனிதநேயம் பின்பற்றாவிட்டால் ஆத்மார்த்த இறையுணர்வு நிலையைத் தேட முடியுமா?

ஆகவே தயவு செய்து வகுப்புவாத வகைப்படுத்தல் உடனடியாக நிறுத்தி கடந்த காலத்தைப் போல் நிலைமையை வழமையாக்க வழிவகுக்குமாறு தங்களை தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தீர்வு எட்டாவிட்டால் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்த உத்தேசித்துள்ளோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜர் பிரதிகள் அமைச்சர் மனோ கணேசன், வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன், வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (9-285)

### திணைக்களத்துக்குரிய வாகனத்தை தனிநபர் பயன்படுத்துவதாக பொதுமக்கள் விசனம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு முத்தையன் கட்டில் சுகாதாரத் திணைக்களத்திற்குரிய முச்சக்கர வண்டியை தனிநபர் ஒருவர் பயன்படுத்துவதாக ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முத்தையன்கட்டில் இருந்து அவசர நோயாளர்களை ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு வருவதற்கென முத்தையன் கட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியை தனிநபர் ஒருவர் பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில் குறித்த முச்சக்கர வண்டியை முத்தையன்கட்டின் குடும்பநல மருத்துவ மாதுவின் பொறுப்பில் ஒப்படைக்குமாறு கூட்டத்தில் இணைத் தலைவர்களால் அறிவிக்கப்பட்டது. (9-350)

# பாரதம்

## சுஷ்மா சுவராஜின் மறைவுக்கு இரு நாட்கள் துக்கம் அனுஷ்டிப்பு




(டில்லி)

முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மறைவுக்கு. இரு நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என டில்லி அரசு அறிவித்தது.

முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் (வயது-67), நேற்று முன்தினம் இரவு மாரடைப்பால் காலமானார். அவரது மறைவுக்கு பல்வேறு தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், சுஷ்மா சுவராஜின் மறைவுக்கு இரண்டு நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என டில்லி அரசு அறிவித்தது. (ஐ)

## மறைந்த சுஷ்மா சுவராஜுக்கு ஜனாதிபதி, பிரதமர் அஞ்சலி!







(டில்லி)

மத்திய வெளியுறவுத்துறை முன்னாள் அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மறைவையடுத்து, அவரது உடலுக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், பிரதமர் மோடி ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

முன்னாள் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரும், பா.ஜ.க. சிரேஷ்ட தலைவருமான சுஷ்மா சுவராஜ் (வயது 67), நேற்று முன்தினம் இரவு மாரடைப்பால் காலமானார். அவரது மறைவுக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், பிரதமர் மோடி உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் இரங்கல் தெரிவித்ததுடன் நேரில் சென்று அஞ்சலியும் செலுத்தினர்.

சுஷ்மா சுவராஜ் உறவினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் அஞ்சலி செலுத்த அவரது உடல் நேற்றுக் காலை 11 மணி வரை வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காஷ்மீர் விவகார

# புல்வாமா தாக்குதல் ே
# மீண்டும் தாக்குதல் நை

### பாக்.பிரதமர் இம்ரான் மிரட்டல்



(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து இரத்துசெய்யப்பட்டதால் புல்வாமா போல மற்றொரு தாக்குதல் நடைபெறும் என்று இம்ரான் கான் மிரட்டியுள்ளார்.

காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் சட்டப்பிரிவு 370 இரத்து செய்யப்பட்டது. இந்நிலையில் காஷ்மீர் சூழ்நிலை குறித்து விவாதிக்க பாகிஸ்தான் பாராளுமன்ற கூட்டுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் தெரிவித்தாவது,

இந்த நடவடிக்கையின் மூலம் புல்வாமா தாக்குதல் போல மீண்டும் ஒரு தாக்குதல் நடைபெறும். நான் இதுபோல தாக்குதல் நிகழப் போகிறது என்று முன்கூட்டியே தெரிவிக்கிறேன்.

ஆனால் அவர்கள் (இந்தியா) நம் மீது மீண்டும் பழியை சுமத்த முயற்சிப்பார்கள். அவர்கள் நம் மீது மீண்டும் தாக்குதல் நடத்துவார்கள், நாமும் திருப்பி தாக்குவோம்.

அதன்பின்னர் என்ன நடக்கும்? யார் இந்த போரில் வெற்றிபெறுவார்கள்? யாரும் வெற்றி பெறப்போவதில்லை. இது ஒட்டுமொத்த உலகத்துக்கே மிகப்பெரிய விளைவுகளை ஏற்படுத்தும். இது அணுகுண்டு மிரட்டல் அல்ல.

அவர்கள் காஷ்மீரில் என்ன செய்தார்களோ அது அவர்கள் சம்பந்தப்பட்ட கொள்கை. அவர்கள் இனவெறி கொள்கை உடையவர்கள். அவர்களது கொள்கை தான் மகாத்மா காந்தியை கொன்றது. இந்த பிரச்சினை தொடர்பாக உலகம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அவர்கள் சொந்த சட்டங்களையே கடைப்பிடிக்கமாட்டார்கள். பின்னர் நாங்கள் அதற்கு பொறுப்பாக மாட்டோம்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் உட்பட உலகின் ஒவ்வொரு அமைப்பிலும் நாம் இதுபற்றி வலியுறுத்துவோம். சர்வதேச நீதிமன்றுக்குப் இந்த பிரச்சினையை கொண்டு செல்லும் திட்டமும் உள்ளது.

நான் முதலில் இந்தியாவுடன் நல்லுறவை மேம்படுத்த முயன்றபோது. அவர்கள் பாகிஸ்தானில் இருந்து பயங்கரவாதிகள் இயங்குவதாக தங்கள் வருத்தத்தை தெரிவித்தனர்.

கடுமையான மற்றும் வலியை ஏற்படுத்தும் இராணுவ பயிற்சி கல்லூரி படுகொலைக்குப் பின்னர், எங்கள் அனைத்து அரசியல் கட்சிகளும் பாகிஸ்தான் மண்ணை பயங்கரவாத

## காஷ்மீரில் நிலவும் பதற்றம்

# இந்தியாவும் பாகிஸ்தானும் பொறுமையை கடைப்பிடியுங்கள்

### ஐ.நா. அறிவுரை

(நியூயோர்க்)

காஷ்மீருக்கான சிறப்பு அந்த்ஸ்து இரத்துச் செய்யப்பட்ட விவகாரத்தில் இரு தரப்பினரும் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு இந்தியா, பாகிஸ்தானுக்கு ஐ.நா. அறிவுரை வழங்கியுள்ளது.

காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து இரத்து குறித்து ஐ.நா. பொதுச்செயலாளர். அன்டோனியோ குட்ரேரஸின் நிலைப்பாடு பற்றி அவருடைய செய்தித்தொடர்பாளர் ஸ்டீபன் துஜாரிக்கிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போது அவர் தெரிவித்ததாவது.

ஐ.நா.பொதுச்செயலாளர், காஷ்மீரில் நிலவும் பதற்றமான சூழ்நிலையை கவலையுடன் பார்த்து வருகிறார். அனைத்துத் தரப்பினரும் பொறுமையை கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இரு நாடுகளும் கேட்டுக்கொண்டால்தான் அவர் சமரசம் செய்து வைப்பார் என அவர் தெரிவித்தார். (ஐ)

## நெருப்புடன் விளையாட வேண்டாம்

### ஹொங்கொங் போராட்டக்காரர்களுக்கு சீனா எச்சரிக்கை

(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வரும் போராட்டக்காரர்களுக்கு சீனா மிக வன்மையான எச்சரிக்கையை விடுத்துள்ளது.

நெருப்புடன் விளையாடுவது பின்னர் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று சீனா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை எச்சரிக்கை விடுத்துள்ளது.


ஹொங்கொங்கில் உள்ள சீனாவுக்கான

# வெளிநாடு

காரம்

ல் போன்று

நடைக்கும்!



நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த அனுமதிப்பதில்லை என்று தீர்மானித்துள்ளதாக மோடியிடம் நான் கூறினேன்.

ஆனால் இந்திய தரப்புக்கு பேச்சுவார்த்தை நடத்துவதில் அக்கறை இல்லை என்பதை நான் உணர்ந்தேன்.

நாம் ஷாங்காய் கூட்டுறவு அமைப்பின் மாநாட்டு முடிவுப்படி சென்றபோது, பேச்சுவார்த்தை மூலம் வலுப்படுத்துவதில் அவர்களுக்கு விருப்பமில்லாதது குறித்து எனக்கு சந்தேகம் எழுந்தது.

நாம் பேச்சுவார்த்தைக்கு அணுகுவதை நமது பலவீனமாக இந்தியா கருதியதால், நாம் பேச்சுவார்த்தைக்கு அழைப்பதை நிறுத்திக்கொண்டோம் என இம்ரான்கான் மேலும் தெரிவித்தார். (ஐ)

# கொங்கோவில் படகு கவிழ்ந்து விபத்து 11 பேர் உயிரிழப்பு; 50 பேர் மாயம்

## 16 பேர் பாதுகாப்பாக கரை சேர்ந்தனர்



(கின்ஷாசா)

கொங்கோவில் ஆற்றில் படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 11 பேர் உயிரிழந்தனர். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தின் போது காணாமல் போன 50 பேரை தேடும் பணியில் மீட்புப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மத்திய ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கொங்கோவில் போதுமான வீதி வசதிகள் இல்லாத காரணத்தால் பெரும்பாலான மக்கள் படகு போக்குவரத்தையே பிரதானமாக கொண்டுள்ளனர்.

இந்நிலையில், ஹாசி என்ற இடத்திலிருந்து தலைநகர் கின்ஷாசா நோக்கி லுகேனே ஆற்றில் படகு ஒன்று பயணித்துக் கொண்டிருந்தது. அந்த படகு 77 பயணிகளோடு அதிக பாரமான சரக்குகளையும் ஏற்றி சென்றது.

இதன்போது பாரம் தாங்காமல் படகு திடீரென ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தின் போது படகில் இருந்த அனைவரும் கடலில் வீழ்ந்து தத்தளித்தனர்.

இதையடுத்து ஆற்றின் வீழ்ந்த 16 பேர் நீச்சல் அடித்து கரையை அடைந்து தங்களின் உயிர்களைக் காத்துக் கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தகவலறிந்த மீட்பு குழுவினர் விபத்து இடம்பெற்ற பகுதிக்கு சென்று நீரில் மூழ்கியவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஆனால் மீட்பு குழுவினர் சம்பவ இடத்தை அடைவதற்கு முன்னர் தண்ணீரில் மூழ்கி 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 50 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

# துருக்கியில் வான் வழித்தாக்குதல் குர்திஷ் போராளிகள் 7பேர் பலி

(பக்தாத்)

ஈராக்கின் எல்லைக்குள் துருக்கி வான் படை நடத்திய வான்வழித் தாக்குதலில் குர்திஷ் போராளிகள் 7 பேர் உயிரிழந்தனர்.

ஈராக்கில் உள்ள குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி என்னும் அமைப்பை ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா மற்றும் துருக்கி உள்ளிட்ட நாடுகள் பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ளன.

பெரும்பாலும் ஈராக்கின் வடக்கு பகுதியில் ஆதிக்கம் செலுத்திவரும் குர்திஸ்தான் பயங்கரவாதிகள் கான்டில் மலைப்பகுதியிலும் தமது முகாம்களை அமைத்துள்ளனர்.

அங்கிருந்து துருக்கி எல்லையில் பயங்கரவாதத் தாக்குதல்களை அவ்வப்போது நடத்தி வருகின்றனர். இவர்களை ஒடுக்கும் பணியில் துருக்கியின் வான்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தநிலையில், ஈராக்கின் ஹாரா மாகாணத்தில் குர்திஸ்தான் போராளிகளை குறிவைத்து துருக்கியின் விமானப்படைகள் கடந்த இரண்டு நாட்களாக வான்வெளி தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலில் குர்திஸ் பயங்கரவாதிகள் உயிரிழந்ததாக துருக்கி இராணுவம் அறிவித்துள்ளது. (ஐ)

# கருணாநிதியின் முதலாம் ஆண்டு நினைவு தினம்; மு.க.ஸ்ராலின் தலைமையில் அமைதிப் பேரணி



(சென்னை)

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் முதலாம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கருணாநிதி கடந்த ஆண்டு ஒகஸ்ட் 7 ஆம் திகதி உடல்நலக்குறைவால் காலமானார். கருணாநிதியின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சென்னையில் தி.மு.க.தலைவர் மு.க.ஸ்ராலின் தலைமையில் நேற்று புதன்கிழமை அமைதிப் பேரணி நடைபெற்றது. (ஐ)




உயர்மட்ட கொள்கை பரப்பு அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். சீன மத்திய அரசாங்கத்தின் உறுதியான தீர்மானத்தை குறைத்து மதிப்பிடுவதற்கு முயற்சிக்க வேண்டாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சியாக ஒன்பது வாரங்களாக முன்னெடுக்கப்படும் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை சீனா கண்டித்துள்ளது. (ஐ)

# வடகொரியா அணுவாயுதம் தயாரிக்க இணையத்தில் பணம் திருட்டு

## ஐ.நா.புதிய குற்றச்சாட்டு





(ஜெனிவா)

வட கொரியா தனது அணுவாயுதத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நிதியைப் பெறுவதற்காக இணையத் திருட்டில் ஈடுபட்டு இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வங்கிகள் மற்றும் கிரிப்டோகரன்சி எனும் மின்னணு பணத்தை மையமாக வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களின் மூலம் இரண்டு பில்லியன் டொலர்களை வடகொரியா திருடியுள்ளதாக அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான 35 இணைய தாக்குதல் சம்பவங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை விசாரித்து வருவதாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த இரண்டு வாரங்களில் தனது நான்காவது ஏவுகணை சோதனையை நேற்று முன்தினம் வடகொரியா மேற்கொண்டது. இதன்போது இரண்டு ஏவுகணைகள் விண்ணில் ஏவப்பட்டன.

தென்கொரியா மற்றும் அமெரிக்கா இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சிக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையிலேயே இந்த சோதனையை நடத்தியுள்ளதாக வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் நேற்று புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருநாடுகளின் கூட்டு இராணுவப் பயிற்சி, பிராந்தியத்தின் அமைதி உடன்படிக்கைகளுக்கு எதிரானது என்றும் கிம்மின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# ஐ.தே.கட்சியின் உறுப்பினர்களை சஜித்துக்கு எதிராகத் திசை திருப்பி கருவைக் களமிறக்கும் சாத்தியம்

## மகிந்த அணி எதிர்பார்ப்பு

**(கொழும்பு)**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கமாட்டார் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை சஜித்துக்கு எதிராகத் திசை திருப்பி விட்டு சபாநாயகர் கரு ஜெயசூரியவை களமிறக்கும் சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


ஐக்கிய தேசியக் கட்சி தனித்துப் போட்டியிட்டு ஒருபோதும் ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொள்ளாது. ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற தீர்மானத்தில் கட்சிக்குள் பாரிய முரண்பாடுகள் காணப்படுவதாகவும் யாப்பா தெரிவித்தார். (இ-7)



“கோத்தபாயவுடன் இரகசிய சந்திப்பை நடத்தவில்லை”

# உடல் நிலை குறித்து உரையாடினேன் அரசியல் எதுவும் பேசப்படவில்லை

## அமைச்சர் சாகல விளக்கம்



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் தான் இரகசிய சந்திப்பை நடத்தவில்லை என துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார். கோத்தபாய ராஜபக்ஷவை அவரது இல்லத்துக்குச் சென்று சந்தித்ததாகவும் பகல் வெளிச்சத்தில் வெளிப்படையாக நடந்த சந்திப்பே என்றும் அவர் தெரிவித்தார். அண்மையில் நடந்த இந்தச் சந்திப்பு குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் சாகல ரத்நாயக்க,

“அறுவை சிகிச்சைக்குப் பின்னர் நாடு திரும்பிய அவரைச் சந்தித்தேன். இச் சந்திப்பு குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முழுமையாக அறிந்திருந்தார்.

நான் அவரது வீட்டிற்கு பாதுகாப்பு அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டேன். அப்போது, அமைச்சர் கபீர் ஹாசிமும் முன்னாள் பாதுகாப்புச் செயலரின் அறையில் இருந்தார். அமைச்சர் கபீர் ஹாசிம் ஏன் அங்கு வந்திருந்தார் என்று விசாரிப்பது எனது கடமை அல்ல. நான் அங்கு சென்ற சிறிது நேரத்திலேயே அவர் புறப்பட்டுச் சென்று விட்டார்.

கோத்தபாய ராஜபக்ஷவுடன் அவரது உடல்நிலை குறித்து நான் சுருக்கமாக உரையாடினேன். அந்தச் சந்திப்பில் அரசியல் எதுவும் பேசப்படவில்லை.

இது ஒரு மனிதாபிமான சந்திப்பு மட்டும் தான். அரசியல் போட்டியாளர்களாக இருந்தாலும் நாங்கள் எதிரிகள் அல்ல.

எனது அரசியல் போட்டியாளர்களுடன் நான் எப்போதும் நட்புறவைப் பேணி வருகிறேன். நாகரிகமான முறையில் அரசியலில் ஈடுபடுவது முக்கியம்.

ஏனைய பலரையும் போன்று, நான் எனது அரசியல் போட்டியாளர்களுடன் மூடிய கதவு சந்திப்புகளைக் நடத்துவதில்லை.

நான் அவர்களைச் சந்திக்கும் போதெல்லாம், கட்சித் தலைமைக்கு முன்பே அறிவித்து, அனுமதியைப் பெறுகிறேன்” என்றும் சாகல விளக்கமளித்தார். (இ-7)

# ரஷ்ய-இலங்கை படைத்தளபதிகள் சந்திப்பு



(மொஸ்கோ)

ரஷ்யாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்க, ரஷ்ய தரைப்படைகளின் தளபதி ஜெனரல் ஒலேக் சல்யுகோவ்வை சந்தித்து பேச்சு நடத்தினார். மொஸ்கோவில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி தயான்ஜெயதிலக்கவும் இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து பேசப்பட்டதாக தெரிய வருகிறது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அன்பும் அறிவும்

ஒரு அம்மாவுக்கு அவர் வீட்டுக்காரர் மேலே அளவு கடந்த அன்பு. அந்த அன்பை அவர்கள் காட்டுகின்ற விதம் எப்படித் தெரியுமா?

கோப்பி போடும் போது சர்க்கரையை கை நிறைய அள்ளி அதிலே கொட்டிக் கொடுப்பார்கள்.

அந்த அப்பாவி மனிதனும் அதை மிகவும் விருப்பமாக சாப்பிடுவார். வெளியிலேயும் அதை மிகவும் பெருமையாக சொல்லுவார்.

என் மனைவிக்கு வரவர என் மேலே அன்பு அதிகமாகிக் கொண்டே வருகின்றது என்பார்.

எப்படி சொல்றீங்க என்று கேட்டார்.

முன்பெல்லாம் இரண்டு கைபிடி சர்க்கரை கோப்பியிலே போடுவார்கள். இப்போது மூன்று கைப்பிடி சர்க்கரை கோப்பியிலே போடுவார்கள். அப்படி என்றால் அன்பு வரவர அதிகமாகிக் கொண்டு வருகிறது என்று தானே அர்த்தம்? என்பார்.

அந்த அம்மாவிடம் அன்பு அதிகமாக இருக்கிறது. உண்மையோ இல்லையோ இவரிடம் அறிவுக்குறைச்சல் என்பது உண்மை. அதில் சந்தேகமே வேண்டியதில்லை.

அன்பு மட்டும் ஒருவரிடம் இருந்தாலும் பயன் இல்லை. அறிவு மட்டும் ஒருவரிடம் இருந்தாலும் பயன் இல்லை.

மகிழ்ச்சியான வாழ்விற்கு மிகவும் முக்கியமாகத் தேவைப்படுவது இரண்டு.

ஒன்று அன்பு. மற்றொன்று அறிவு. இந்த இரண்டிலே ஒன்று இல்லையென்றால் கூட மகிழ்ச்சி போய் விடும் என்கிறார் தத்துவ மேதை பெட்ரண்டரஸ்ஸல்.

அதை விளக்குவதற்கு அவர் மிகப் பெரிய உதாரணம் கொடுக்கிறார். இரண்டாவது உலக யுத்தம் நடந்ததல்லவா. அந்தச் சமயத்திலே பல நாடுகளில் ஏராளமான இராணுவத் தளபாடங்கள் எல்லாம் தயார் செய்தார்கள்.

வெடி மருந்துச் தொழிற்சாலைகள் எல்லாம் உருவாக்கினார்கள். நவீனமான போர்க் கருவிகள் எல்லாம் தயார் செய்தார்கள். அதற்கெல்லாம் எது காரணம்? அறிவுதான் காரணம்.

அவர்களிடமிருந்த தொழில்நுட்ப அறிவுதான் இவ்வளவும் தயாராவதற்குக் காரணம்.

இருந்தும் இதெல்லாம் எதற்கு உபயோகப்படுகின்றது. உலகத்திலே கெடுதல் செய்வதற்குத்தான் உபயோகப்படுகின்றது.

யுத்தத்தை ஆரம்பித்த ஜேர்மனியர்களும் சரி மற்ற நாட்டுக் காரர்களும் சரி தாங்க முடியாத கஷ்டங்களை அனுபவித்தார்கள். இதற்கு என்ன காரணம். அன்பு எழ்பது இல்லாமல் போனது தான் காரணம்.

அறிவு ஆயதங்களைத் தயார் செய்தது. அன்பு இல்லாததனாலே அது அவர்களுக்கு இடைஞ்சலாகப் போய்விட்டது. அன்பு சேராத வெறும் அறிவு மட்டும் மகிழ்ச்சியைக் கொடுக்க முடிய வில்லையே.

அதேமாதிரித்தான் அறிவு சேராத அன்பினாலே யும் மகிழ்ச்சியைக் கொடுக்க முடியாது. அறிவு சேராத அன்பும் ஆபத்தை உண்டாக்கிவிடும்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலே இந்தியாவி லேயும் பக்க த்து நாடுகளிலும் ஒரு பயங்கரமான நோய் பரவியது. பிளேக் என்ற தொற்றுநோய் தான் அது.

அது அதிகமாகப் பரவியதற்குக் காரணம் என்ன என்று நினைக்கிறீர்கள்? அன்புதான் அதற்குக் காரணம்.

எப்படித் தெரியுமா? அன்பு காரணமாக உறவினர்களும் நண்பர்களும் நோயாளர்களைக் கட்டித் தழுவி தங்களுடைய அன்பைத் தெரிவித்துக் கொண்டார்களாம். இது நோய் வேகமாகப் பரவுவதற்கு சாதகமாகப் போய்விட்டது.

அறிவு சேராத அன்பினாலே இந்த நிலைமையைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்,

அறிவு இல்லாத அன்பும் ஆபத்து, அன்பு இல்லாத அறிவும் ஆபுத்து. நாம் சந்தோசமாக இருக்க வேண்டுமென்றால் இவை இரண்டும் கலந்து இருக்க வேண்டியது அவசியம்.


ஒரு குடும்பத்திலே மனைவிக்கு உடம்பு சரியில்லை! கணவன் காலையில் எழுந்து கோப்பி போட்டார். கோப்பி போடுவது இதுதான் அவருக்கு முதல் அனுபவம்.

என்னென்னத்தையோ எடுத்து ஒன்றாகக் கலந்தார். கோப்பி மாதிரி ஒரு திரவத்தைத் தயார் செய்தார். மிகவும் பக்குவமாக மனைவியிடம் கொண்டு போய் கொடுத்து சாப்பிடச் சொன்னார்.

நீங்கள் சாப்பிடுங்கள் என்றார். எனக்கு வேண்டாம் நீ சாப்பிடு என்றார் இவர். அந்தளவுக்கு என்மேல் அன்பு வைத்திருக்கிறீர்களா? என்றார். அவர் நிமிர்ந்து அந்த அம்மாவைப் பார்த்தார். என்னிடம் அன்பு இருக்கு அதனால் தான் உன்னைச் சாப்பிடச் சொன்னேன். அந்த நேரத்திலே எனக்கு அறிவு இருக்கு அதனாலே தான் நான் சாப்பிட மாட்டேன் என்று சொன்னேன். ஏனென்றால் நான் தயார் செய்த கோப்பி அப்படி என்று விளக்கம் கொடுத்தார் அந்த ஆள்.

# சஹ்ரானின் தீவிரவாத நடவடிக்கைகள் குறித்து இரண்டு உளவுத்துறை தகவல்கள் கிடைத்தன

## முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாட்சியம்



(கொழும்பு)

சஹ்ரானின் தீவிரவாத நடவடிக்கைகள் குறித்து தனக்கு இரண்டு உளவுத்துறை தகவல்கள் கிடைத்ததாக முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னிலையாகி சாட்சியம் வழங்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சட்டம் ஒழுங்கு அமைச்சராக தான் 7 மாதங்கள் மட்டுமே கடமையாற்றியுள்ளதாக தெரி வித்த அவர், தேசியப் பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் திறம்படச் செயற்பட நிரந்தர அமைச்சரும் சட்டம் ஒழுங்கு செயலாளரும் இருக்க வேண்டும் என்றும் கூறினார்.

அவ்வாறு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராக இருந்த காலத்தில் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவன் சஹ்ரானின் தீவிரவாத நடவடிக்கைகள் குறித்து தனக்கு இரண்டு புலனாய்வுத்துறை தகவல்கள் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

முதலாவது அறிக்கை 2018 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி கிடைக்கப்பெற்றதாகவும் இது காத்தான்குடியில் இரண்டு இஸ்லாமியப்பிரிவுகளுக்கு இடையே ஏற்பட்ட மோதல் தொடர்பானது என்றும் இரண்டாவதாக அதே ஆண்டு மே 19 ஆம் திகதி சஹ்ரானின் தீவிரவாத நடவடிக்கைகள் மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். செயற்பாடுகளை வரவேற்கும் உரைகள் பற்றிக் கிடைத்ததாகவும் தெரிவித்தார்.

அந்த அறிக்கைகளின் அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், அந்த அறிக்கைகளைப் பெற்ற பின்னர், 2018 ஜூலை 9 ஆம் திகதி சஹ்ரானை கைது செய்யப் பயங்கரவாத தடுப்புப்பிரிவினால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இதன் பின்னர் சஹ்ரானைக் கைது செய்ய பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் பல குழுக்களை அனுப்பியது என்றும் குறிப்பாக அவர் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது என்றும் தெரிவித்தார்.

இதேவேளை பொலிஸ் அதிகாரிகள், குருநாகலில் அவரது மனைவியின் வீடு அமைந்திருந்த நாரம்மலவுக்குச் சென்றிருந்தனர். ஆனால் சஹ்ரான் அங்கு இருக்கவில்லை.(இ-7)

# குருந்தம் சிகிச்சை நிலையம் விரைவில் புதிய கட்டடத்தில்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள மது வெறுப்பு (குருந்தம்) சிகிச்சை நிலையத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. அந்த வகையில் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு மது வெறுப்பு சிகிச்சை நிலையத்தினைத் திறந்து வைக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

பல மில்லியன் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன், புதுத் தோற்றப் பொழிவுடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மது வெறுப்பு சிகிச்சை நிலையக் கட்டடம் அமையப்பெற்றுள்ளது.

தற்போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மது வெறுப்பு சிகிச்சை நிலையம் காணப்படுகின்ற போதிலும் பழைமையான கட்டடம், மாரி காலத்தில் கூரை ஒழுக்கு உள்ளிட்ட பல குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றது.

கடந்த வருடம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரத்த பரிசோதனை நிலையத்தினை சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன திறந்து வைத்ததுடன் அவர் சில வாக்குறுதிகளையும் வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கு அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# நிறமூட்டப்பட்ட சிவப்புப் பச்சை அரிசி கைப்பற்றல்

(கல்முனை)

நிறமூட்டப்பட்ட சிவப்பு பச்சை அரிசித் தொகையொன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மாத்தறை பகுதியில் முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போதே இவை கைப்பற்றப்பட்டன. இதன் மாதிரிகள் ஆய்வுக்காக அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்தார்.

வெள்ளை பச்சை அரிசிக்குச் சிவப்புநிற நிறமூட்டியைப் பயன்படுத்தி நிறமூட்டப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.


இவ்வாறான 3 ஆயிரம் கிலோ கிராம் நிறமூட்டப்பட்ட அரிசி மாத்தறை, முலட்டியன பகுதியில் வைத்துக் கைப்பற்றப்பட்டுள்ளது.

பெலியத்த பகுதியைச் சேர்ந்த மொத்த வர்த்தகரொருவரே குறித்த அரிசி தொகையினை வைத்திருந்ததாகத் தெரியவருகிறது.

குறித்த நிறமூட்டப்பட்ட அரிசி காத்தான்குடி மற்றும் கல்முனை பகுதியில் தயாரிக்கப்பட்டதெனவும் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக மகேந்திர பாலசூரிய குறிப்பிட்டார்.

அரிசி தொகையினை நீதிமன்றத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று மூன்றாம் திருவிழா



### அடியவர் ஆத்ம அலறல்

முருகா
எங்களைக் காக்கும்
கருணைத் தெய்வமே தெய்வமே
உன்னை விஞ்சிய காவலா...
உனைக்காண 'தடவுதல்' சோதனையா...
வேண்டாம் ஐயனே!
கும்பிட முடியவில்லை
இத்தனை காலம்
இல்லாத இந்த அநாகரிகத்தை
இன்றோடு நிறுத்திவிடு முருகா!
முருகா! முருகா! முருகா!!!

சகன்.

### மனதில் நிம்மதியில்லையே

ஒரு கோடி வைத்திருப்பவனோ
சிரிக்கிறானில்லை-முருகா!
ஒரு ரூபாய் வைத்திருக்கும் நீயோ
எப்படிச் சிரிக்கிறாய்-முருகா?

மாடி வீடு கட்டினாலும் -முருகா
மனதில் நிம்மதியில்லையே!
மயில்மீது வரும் உன்னை பார்த்தால்
மனதில் நிம்மதி வருகிறதே!

கே.எஸ்.சிவஞானராஜா.

### முத்துக்குமரா வருகவே

தில்லைக் கூத்தன் புதல்வனே சரவணா
திருவிளையாடல் பல புரிந்த வேலவா
சேவற்கொடி உன் வீரம் முருகா
சீர்நிறை அழகா மயில் வாகனா...

அறுபடை வீடுடைய ஐயனே வருக
அலங்கார கந்தனே வீதியுலா வருகவே
அமைதி வாழ்வு அனைவருக்கும் தருகவே
அகிலம் செழிப்பாக எழுந்து வருகவே

கண்ணன்.

### யாமிருக்கப்பயமேன்

கந்தனே! உன்னைக்காண வந்தேனே
எந்தன் வேதனை சொல்ல தேடி வந்தேனே
வேலவா! எனக்கேன் இந்த சோதனை(ச்சாவடி) குமரனே!
ஐயனே! என்னடா வேடிக்கை
ஆண்டுகள் தோறுமேன்
அசுரனை வதம்செய்தாய் என்றுனக்கு விழா??
ஆறுமுகத்தோனே நான் வணங்கும் முருகோனே
வந்தபகையோட்டி சூரனோடு போர்புரிந்து
தேவர்களை காத்து நின்று நீவரும்
பகையறுக்க பன்னிருகை வேலேந்தி
உன் பக்தர்களை காக்க மாட்டாயோ

புங்குடுதீவு சதீஸ்.

### சந்தக் கவியில் நல்லைக் குமரன்!

யாழும் நகர் நல் லூர்ப்பதி
யாளும் குக வேளும்
மூளும் பட ரூழும் தொட
முடியா தெமைச் சூழும்
ஆளும் பல கோளு மவன்
அடி போற்றிட வீழும்
நாளு முல கேழும் நிறை
நல்லைக் கும ரோனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

# அரச காணியை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமான கேள்வி பதில்கள்



04

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

**கேள்வி -10:-** அரசகாணிகள் நீண்ட கால குத்தகை முறிகளில் / பத்திரத்தில் காணப்படும் நிபந்தனைகள் என்ன?

**பதில்:-**

- குத்தகைக் காலம் 30 வருடங்கள்.
- வருடாந்தக் குத்தகைப் பணம் செலுத்தப்பட வேண்டும்.
- குத்தகைத் தொகை ஒவ்வொரு ஐந்து வருடங் களுக்கொருதடவைமீளாய்வுசெய்யப்படும்.
- என்ன தேவைக்கு அரச காணி குத்தகைக் குப் பெறப்பட்டதோ அத்தேவைக்கே பயன்படுத்துதல் வேண்டும். வேறு தேவைகளுக்கு பயன்படுத்த முடியாது.
- காணி ஆணையாளர் நாயகத்தின் முன் அனுமதி இல்லாமல் கைமாற்றம் செய்யவோ ஈடு வைக்கவோ முடியாது.
- ஒப்பந்தங்கள் மற்றும் நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் குத்தகையை இரத்துச்செய்யமுடியும்.

**கேள்வி -11:-**நீண்டகால குத்தகையில் குத்த கைக் காலத்தை நீடிக்க முடியுமா?

**பதில்:-** பொதுவாகக் நீண்டகால குத்தகையில் குத்தகைக் காலம் 30 வருடங்கள் ஆகும். விசேட செயற்றிட்டத்தில் குத்தகைக் காலப்பகுதியை அமைச் சரவை அங்கீகாரத்துடன் 50 வருடங்களாக நீடிக்க முடியும்.

**கேள்வி -12:-**அரச காணிகள் கட்டளைச் சட்டத் தின் கீழ் விசேட செயற்றிட்டங்களுக்கென நீண்ட காலக் குத்தகை முறிகள் லழங்கப்படுகின்றனவா?

**பதில்:-** ஆம். அவை விசேட செயற்றிட்டங்களுக் கான நீண்டகாலக் குத்தகை முறிகள் என அழைக் கப்படுகின்றன. இதற்குரிய தகைமைகள்,

- அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட் டுள்ள செயற்றிட்டமாக இருத்தல்.
- முதலீட்டுச் சபையினால் அனுமதிக்கப் பட்டுள்ள செயற்றிட்டமாக இருத்தல்.
- கைத்தொழில் அமைச்சினால் அனுமதிக் கப்பட்டுள்ள செயற்றிட்டமாக இருத்தல்.
- செயற்றிட்ட பணிப்பாளர் சபையில் குறைந்தது ஒரு உறுப்பினராவது இலங்கைப் பிரஜையாக இருத்தல்.

**கேள்வி -13:-** விசேட செயற்றிட்டங்களுக்கென நீண்டகாலக் குத்தகை விண்ணப்பத்தைச் சமர்ப்பிக் கும் வழிமுறை என்ன?

**பதில்:-** இதற்கென விசேட நடைமுறைகளி ல்லை. விசேட விண்ணப்பப் படிவங்கள் இல்லை. தாங்களே தயாரித்துக் கடித அமைப்பிலான விண் ணப்பத்தைச் சமர்ப்பிக்க முடியும். எழுத்திலான விண்ணப்பத்தைப் பிரதேச செயலாளர்/ மாகாணக் காணி ஆணையாளர்/ காணி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். சேவைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

காணியைக் குத்தகைக்கு வழங்குவதனால் வருடாந்தக் குத்தகைப் பணம் அறவிடப்படும். குத்தகைப் பணம் அறவிடும் முறை என்னவெனில், காணியைக் கையளித்த வருடத்தில், காணியின் வர்த்தகப் பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகை யாகச் செலுத்த வேண்டும். குத்தகைத் தொகை ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கொரு தடவை மீளா ய்வு செய்யப்படல் வேண்டும்.

எனினும் குத்தகைத் தொகையை மீளாயும் பொழுது அதுவரை அறவிடப்பட்ட குத்தகைத் தொகை யின் நூற்றுக்கு 50இற்கு விஞ்சிய அளவுக்கு அது அதி கரிக்கக் கூடாது.

மேற்கூறப்பட்டுள்ள அனைத்துத் தருணங்களிலும் ஒரு முறை மட்டும் செலுத்தப்பட வேண்டிய தவணைப் பணம் குத்தகை ஆரம்பிக்கும் போது அறவிடப்படும். தவணைப் பணம், வருடாந்தக் குத்தகைப் பணத்தின் மூன்று மடங்குகள். குத்தகைப் பணத்தைத் தீர்மா னித்து அறவிடப்படுவதற்குக் கையாளப்படும் அனை த்துப் பெறுமதி மதிப்பீடுகளும் அரச பிரதான பெறுமதி மதிப்பாளரின் (Chief Valuer) மதிப்பீடுகளுக்க மையவே மேற்கொள்ளப்படும். சேவையைப் பெற்றுக் கொள்வதற்கான காலப் பகுதி (சாதாரண சேவை/ முன்னுரிமைச் சேவை) குறைந்தது 06 மாதங்கள் ஆகும்.

**கேள்வி-14:-** விசேட செயற்றிட்டங்களுக்கென நீண்டகாலக் குத்தகைக்கு அரச காணியைப் பெற விண்ணப்பப் பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள் என்ன?

**பதில்:-** விண்ணப்பப்பத்திரத்துடன் பின்வரும் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

- செயற்றிட்ட அறிக்கை.
- செயற்றிட்டம் தொடர்பாக முதலீட்டுச் சபை/ கைத்தொழில் அமைச்சு/ வேறு ஏற்புடைத்த நிறுவன த்தின் அங்கீகாரம்.
- வர்த்தகப் பதிவுச் சான்றிதழ்.
- கூட்டு வர்த்தகமெனில் பணிப்பாளர்களின் பெயர் விபரங்கள்.
- கம்பனிப் பதிவுச்சட்டத்தின் கீழான விளக்கங்கள்.

**வதிவிடத் தேவைக்காக வழங்கப் பட்ட நீண்டகாலக் குத்தகைக் காணி யில் வீடொன்றை நிர்மாணித்து வசித்து வந்திருந்தால் முறிகளை மாற்றி அளிப்புப் பத்திரங்கள் (grants) பெற்றுக்கொள்ள முடியும். தற்போது இம்முறை மேலும் இலகு வாக்கப்பட்டுள்ளது. கேள்வி-பதில் 42 ஐப் பார்க்கவும்.**

- நில அளவை வரைபடம் அல்லது கிட்டத்தட்டச் சரியான சுவடு வரைதல் (இருக்குமானால் மட்டும்).

**கேள்வி -15:-** அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வதிவிடத் தேவைக்காக வழங்கப்பட்ட நீண்டகாலக் குத்தகை முறிகளுக்கு அளிப்புப் பத்திர ங்கள் பெற்றுக்கொள்ள முடியுமா? முடியுமாயின் என்ன தகைமைகள் இருக்கவேண்டும்?

**பதில்:-** வதிவிடத் தேவைக்காக வழங்கப்பட்ட நீண்டகாலக் குத்தகை முறிகளுக்கு அளிப்புப் பத்தி ரங்கள் பெற்றுக்கொள்ள முடியும். அதற்குரிய தகை மைகள் கீழே தரப்பட்டுள்ளன.

வதிவிடத் தேவைக்கென நீண்டகாலக் குத்தகை முறியொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் அந்தக் காணியில் வீடொன்றை நிர்மாணித்து வசித்து வருதல்.

- ஏற்புடைத்த பிரகாரம் குத்தகைப் பணத்தைச் செலுத்தி இருத்தல்.

**கேள்வி-16:-** அளிப்புப் பத்திரங்களைப் (grants) பெறுவதற்கு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக் கும் வழிமுறை என்ன?

**பதில்:-** காணி ஆணையாளர் நாயகத்தின் 26.09.2003 திகதியிடப்பட்ட சுற்றுநிருபம்இல.12/2003 இன் கீழ் இணைக்கப்பட்டுள்ள பூரண அளிப்புக்கான விண்ணப்பத்தை குடியிருப்புக்காக பெற்ற நபரோ பெற இருப்பவரோ தயாரித்தல் வேண்டும். எழுத்திலான இவ் விண்ணப்பத்தைப் பிரதேச செயலாளர்/ மாகாணக் காணி ஆணையாளர்/ காணி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**கேள்வி-17:-** அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வதிவிடக் குத்தகை முறிகளுக்கு அளிப்புப் பத்திரங்கள் பெறுவதற்கு கட்டணங்கள் அறவிடப்படுமா?

**பதில்:-** விண்ணப்பத்திற்கு கட்டணம் அறவிடப் படுவதில்லை. சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு சேவைக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது. ஆனால் காணியைக் கையளிக்கப்பட்ட வருடத்தின், காணியின் அபிவிருத்தியடையாத பெறுமதியைப் பூரணமாக செலுத்தி இருத்தல் வேண்டும்.

ஏற்கனவே அவரிடம் அறவிட்ட நீண்டகாலக் குத்தகை அறவீட்டை கழித்து மிகுதியை அவர் அரசுக்கு செலுத்த வேண்டும். இதற்கு மேலதிக மாக, நீண்டகாலக் குத்தகை ஆரம்பமாகும் போது ஒரு முறை மட்டும் செலுத்தப்பட வேண்டிய தவ ணைப் பணம் செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு மாற்றுவதற்கு குறைந்தது 06 மாதங்கள் ஆகும்.

**கேள்வி-18:-** வதிவிடத் தேவைக்காக வழங்கப் பட்ட நீண்டகாலக் குத்தகை முறிகளுக்கு அளிப்புப் பத்திரங்கள் பெற்றுக்கொள்வதற்கு தேவைப்படும் ஆவணங்கள் எவை?

**பதில்:-** தேவைப்படும் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள்.

- விண்ணப்பம்.
- வழங்கப்பட்டுள்ள நீண்டகாலக் குத்தகைமுறி.
- குத்தகைப் பணம் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டுக்கள்.

**கேள்வி -19 :-** அத்துமீறிப் பிடித்துக் கொண் டிருக்கும் காணியை அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குத்தகைக்கு வழங்குவது எப்படி?

**பதில்:-** 1995.06.15 ஆம் திகதிக்கு முன்பிருந்து அத்துமீறல் செய்து, காணியை அனுபவித்து வருபவ ராகவும் அவரைக் காணியிலிருந்து வெளியேற்றுதல் சாத்தியமில்லாததாகவும் இருந்தால் அவருக்கு அக் காணியை நீண்டகாலக் குத்தகைக்கு கொடுக்க முடியும்.

அத்துமீறிப் பிடித்துக் கொண்டிருக்கும் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கான அறிக்கை பிரதேச செயலாளரால் தயாரிக்கப்படும் போது பின்வரும் தகவல்கள் அவ் அறிக்கையில் கொடுக்கப்பட வேண்டு மென அரச காணி தொடர்பான நடவடிக்கைக் கோவை யில் கூறப்பட்டுள்ளது.

(தொடரும்...)

# ஏழு இளம் பிக்குகள் எச்.ஐ.விக்கு சிகிச்சை!

## இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் தகவல்

### மதத் தலைவர்கள் மீதும் பரபரப்பு புகார்



**(கொழும்பு)**

**ஏழு இளம் பிக்குகள் எச்.ஐ.வி நோய்த் தொற்றுக்கான சிகிச்சை பெற்று வருவதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராம்நாயக்க தெரிவித்ததாக பி.பி.சி.செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கையிலுள்ள பௌத்த பிக்குகள் சிலர், பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டு வருவது தொடர்பான தகவல் கள் தன்னிடம் உள்ளதாகவும் ரஞ்சன் தெரிவித்தார்.**

பௌத்த பிக்குகள் பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடும் காணொலிகளும் தன்னிடம் இருப்பதாகவும் தாம் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டமை தொடர்பான தகவல்களை இரண்டு இளம் பௌத்த பிக்குகள் தன்னிடம் வழங்கியதாகவும் அது குறித்து தான் செய்த முறைப்பாட்டிற்கு அமைய பௌத்த பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ரஞ்சன் தெரிவித்தார்.

பௌத்த பிக்குகள் மாத்திரமின்றி, பல சமயங்களைச் சேர்ந்த மதத் தலைவர்களும் பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றமை தொடர்பான தகவல்கள் தன்னிடம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மதத் தலைவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுகின்ற ஆதாரங்கள் தனது கையடக்கத் தொலைபேசியில் உள்ளதாகவும் வெளிப்படையாக காண்பிக்க முடியாத ஆதாரங்களே தன்வசம் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

தமக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து பல்வேறு தரப்பிற்கு தெரிவித்திருந்த போதிலும் தமக்கான நியாயம் கிடைக்கவில்லை என சிறுவயது பௌத்த பிக்குகள் தன்னிடம் கூறியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் குரல் எழுப்பும் பட்சத்தில், அரசியல்வாதிகளின் வாக்குவங்கி குறையும் சாத்தியம் இருப்பதால், எந்தவொரு அரசியல்வாதியும் இது குறித்து கருத்து வெளியிட மாட்டார்கள் எனவும் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

எனினும், தான் வாக்கு வங்கியை எதிர்பார்த்து அரசியலுக்கு வரவில்லை என்று கூறிய அவர், அரசியலிலிருந்து வெளியேற்றினாலும் தான் நியாயம் கிடைக்கும் வரை போராடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தானமாக வழங்கப்படும் உணவை உட்கொள்ளும் பிக்குகள், அந்த அன்னதானத்தை வழங்குவோரின் பிள்ளைகளைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துகின்றார்கள். இந்த விடயம் தொடர்பில் எந்தவொரு சமயத்தைச் சேர்ந்த சமயத் தலைவராக இருந்தாலும் பரவாயில்லை, தன்னுடன் விவாதத்திற்கு வருமாறு அவர் அழைப்பு விடுத்தார்.

பௌத்த பிக்குகள் உள்ளிட்ட சமயத் தலைவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டமைக்கான ஆதாரம் தன்வசம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சமயத் தலைவர்கள் செய்த பாலியல் துஷ்பிரயோகங்கள், ஊழல்கள், மோசடிகள் உள்ளிட்ட அனைத்திற்கும் தன்னிடம் ஆதாரம் உள்ளதாகவும் இதுவரை தான் அமைதியாக இருந்ததாகக் கூறிய அவர், இனியும் அமைதிகாக்க முடியாது என்றும் தெரிவித்தார். (இ-7)

# குண்டுத் தாக்குதலின் பின் பள்ளிவாசல்களிலிருந்து பொலிஸார் எடுத்த கத்திகள் திருப்பி ஒப்படைப்பு

(கொழும்பு)

ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் முஸ்லிம் பள்ளிவாசல்களிலிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட இறைச்சி வெட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் கத்திகளை மீண்டும் அப் பள்ளிவாசல்களுக்கு ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பள்ளிவாசல்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பேரில் உடுநுவர, வெலம்பொட பொலிஸார் இதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

ஹஜ் பெருநாளையடுத்து நிறைவேற்றப்படும் உழ்ஹிய்யா கடமைக்குப் பயன்படுத்த இந்தக் கத்திகள் தேவை என விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று, குறித்த பொலிஸ் நிலையத்தின் பதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இவற்றை மீண்டும் வழங்க அனுமதியை வழங்கினார்.

இதன்படி, 76 கத்திகளும், 13 கோடரிகளும் இவ்வாறு திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் பரிந்துரைகள் இன்றி இவ்வாறு ஆயுதங்களை ஒப்படைத்தமை தொடர்பில் வெளியாகியுள்ள செய்திகள் குறித்து பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பெலம்பொட பொலிஸாரிடம் வினவியுள்ளனர். இதன் போது இவ்வாறான சம்பவம் எதுவும் நடைபெறவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

இருப்பினும், பொலிஸ் தகவல் புத்தகங்களில் இவ்வாறு ஆயுதங்கள் ஒப்படைத்த தகவல்கள் இருப்பதாக அந்த பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வெலம்பொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் பொலிஸ் பரிசோதகருமான சாந்த பண்டார கண்டி தலதா பெரஹறா நிகழ்வுக்காக கடமையாற்ற சென்றிருந்த போது, பதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்தவர் இந்த ஆயுதங்களை வழங்கியுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# தமிழர் வரலாற்றைப் பறைசாற்றும் மற்றுமோர் ஆதாரம் கண்டுபிடிப்பு





(வெலிக்கந்த)

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையில் வெலிக்கந்த பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பகுதியில் பழம் பெரும் பிள்ளையார் ஆலயமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆலயம் மட்டக்களப்பு வெலிக்கந்தையிருந்து வடமுனைக்குச் செல்லும்போது கிழக்கே 8 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இதனை மட்டக்களப்பிலிருந்து இயங்கிவரும் ஶ்ரீ ரமண மகரிசி நற்பணி மன்றத்தினர் இவ்வாலயம் சம்பந்தமான வரலாற்று பொக்கிசங்களைத் தேடித் தொகுத்து ஆவணப்படுத்தி கண்டு பிடித்துள்ளனர்.

1900 ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் தம்மங்கடவையிலிருந்து வந்தாறுமூலை வரையான போக்குவரத்து பாதையில் மாந்திரை ஆற்றங்கரையில் மருத மரத்தின் கீழ் இந்துக்களால் வைத்து வழிபடப்பட்ட ஆலயமே இந்த ஶ்ரீ வெள்ளிமலைப் பிள்ளையார் ஆலயம் ஆகும்.

இவ்வாலயத்தை சுவாமி ஐயம்பிள்ளை என்பவரின் தனி முயற்சியாலும் அப்போதிருந்த இந்து மக்களின் ஒத்துழைப்புடனும் மூலஸ்தானத்துடன் கூடிய மண்டபத்துடன் ஆலயம் அமைக்கப்பட்டு பிள்ளையார் சிலையும் பிரதிட்சை செய்யப்பட்டது.

1925 ஆம் ஆண்டு முத்துக்கல் உடையாரும் பொதுமக்களும் சேர்ந்து ஆலயத்தை அபிவிருத்தி செய்து ஆலயத்துக்குரிய மடமும் மண்டபமும் அமைத்து 1929 ஆம் ஆண்டு இந்து கலாசார அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டு ஆலயத்துக்கு நிரந்தரமாக அர்ச்சகர் நியமித்து தினப் பூசையுடன் விசேடபூசைகளும் சிறப்பாக இடம் பெற்றுள்ளன.

மட்டக்களப்பு, வந்தாறுமூலை, வாழைச்சேனை, தம்மங்கடவை, முத்துகல் போன்ற பல பகுதிகளிலுள்ள பொதுமக்கள் சேர்ந்து இவ்வாலயத்துக்கு வருடாந்த அலங்கார உற்சவத்தை ஆடி மாதத்தில் மிகவும் சிறப்பாக பிராமண அர்ச்சகரைக் கொண்டு மேளதாள வாத்தியம் முழங்க மிகவும் விமர்சையாகவும் கலாசார நிகழ்வுகளோடும் திருவிழா கொண்டாடி தீர்த்த உற்சவம் ஆடிமாதம் பூரணை தினத்தில் மகாவலி கங்கை மாந்திரை ஆற்றில் ஆடி அன்னதானமும் வழங்கி மகிழ்ந்து வந்தனர்.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயரவும் ஆலயம் பூசை வழிபாடு இன்றி தற்போது காடு மண்டி காணப்படுகிறது.

எனவே புராதன பொக்கிசங்களையும் தமிழர்கள் வாழ்ந்த இடங்களையும் மீளவும் பொறுப்பேற்று இடிபாடுகளைத் திருத்தி பாதுகாக்க வேண்டியது தலையாய கடமை என சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் தெரிவித்தனர்.

ஶ்ரீ ரமண மகரிசி நற்பணி மன்றமும் இவ்வாலயம் சம்பந்தமான வரலாற்று பொக்கிசங்களை தேடித்தொகுத்து ஆவணப்படுத்துதியுள்ளது. மேலும் இந்த வரலாற்றுப் பொக்கிசமான ஆலயத்தை பழைய நிலைக்கு புனரமைத்து வழிபாட்டுக்குரிய இடமாக மாற்றுவதற்கு கிழக்கு இந்துப் பெருமக்களிடமிருந்து ஆலய அபிவிருத்திக்கான உதவிகளை வேண்டி நிற்பதாக இதன் ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

# அரசியலமைப்பு, தேர்தல் சட்டத்திலுள்ள குறைபாடுகள் சிறந்த சமூகத்தை கட்டியெழுப்புவதற்குத் தடை



## ஜனாதிபதி மைத்திரி அதிருப்தி

**(கொழும்பு)**

**நாட்டின் சட்டக் கட்டமைப்பும் அரசியலமைப்பு மற்றும் தேர்தல் சட்டத்திலுள்ள சில குறைபாடுகள் காரணமாக சிறந்ததோர் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தடைகள் உருவாவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிருப்தி வெளியிட்டார்.**

சிறந்த அரசியல் கலாசாரமொன்றிற்காக முன்மொழியப்பட்டுள்ள பரிந்துரைகள் நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் கையளிக்கும் தேசிய நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் சிறந்ததோர் அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்துவதற்கான பரிந்துரைகள் உள்ளடங்கிய முன்மொழிவொன்றை அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்களுக்கு முன்வைக்கும் நோக்குடன் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முன்மொழிவுகள் மூன்று நிக்காயாக்களையும் சேர்ந்த மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட சர்வமதத் தலைவர்களின் இணக்கப்பாட்டுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் சங்கைக்குரிய மகா சங்கத்தினர் உள்ளிட்ட மதத் தலைவர்களின் உடன்பாட்டுடன் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் பரிந்துரைகள் குறித்து தானும் முழுமையான உடன்பாட்டை தெரிவிப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளும் இதற்கு இணக்கம் தெரிவித்தால் குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தான் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

சங்கைக்குரிய திவியாகவுய ஸஸ்சி நாயக்க தேரர் தலைமை வகிக்கும் புத்தசாசன சபையால் இந்தப் பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா அமரபுர மகா நிக்காயவின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய கொட்டுகொட தம்மாவாச தேரர், சங்கைக்குரிய திருக்குணாமலே ஆனந்த தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினரும் ஏனைய மதத் தலைவர்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்களும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

# அரசியல் கைதிகள் விடயத்தை அலட்சியப்படுத்தாமல் அவர்களின் விடுதலைக்காக ஒன்றிணைவோம்

## மன்னார் பிரஜைகள் குழு கோரிக்கை




(மன்னார்)

வெகு விரைவில் விடுதலையாகி தமது குடும்பங்களோடு சுமுகமான வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற ஆதங்கத்தை அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் தம்மிடம் வெளிப்படுத்தியுள்ளதாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

அது தொடர்பில் நேற்று மன்னார் பிரஜைகள் குழுவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல கைதிகள் 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு சுமார் 11 வருடங்களாக சிறையில் வாடிக் கொண்டு இருக்கின்றார்கள்.

எங்களை ஏன் விடுதலை செய்ய முடியாது? எமது தமிழ் அரசியல்வாதிகள், அரசு எங்களை விடுதலை செய்யாமல் ஏன் எங்களை இவ்வாறு புறம் தள்ளியிருக்கின்றது? என எம்மிடம் கேட்டார்கள்.

அவர்களின் கேள்விகளுக்கு பதில் கூற முடியவில்லை. நாங்கள் வெகு விரைவில் வெளியில் வந்து எமது குடும்பங்களோடு சுமுகமான வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற ஆதங்கத்தை எங்களிடத்தில் தெரிவித்தார்கள்.

அவர்கள் பல்வேறு குழப்பத்தில் இருக்கின்றார்கள். அவர்கள் வாழ்வில் முதிர்ச்சி அடைந்து செல்வதோடு. வாழ்வில் அர்த்தம் இல்லை என்பதை உணர்கின்றார்கள்.

வாடிய முகங்களைத்தான் நாங்கள் அவர்களிடத்தில் பார்க்கக்கூடியதாக இருந்தது. அவர்களின் இருப்பைப் பற்றிய யோசனைகள் எழுந்துள்ளன.

இப்படியான ஒரு சூழ்நிலையிலே அரசியல் கைதிகளைப் பற்றி நாம் யோசிக்கின்ற போதும் இன்றைய குற்றவியல் நிகழ்வுகளோடு ஒப்பிடுகின்ற போது உண்மையிலேயே இவர்கள் குற்றமற்றவர்களாகவே மதிக்கத் தோன்றுகின்றது. இவர்களின் தடுப்பு அர்த்தம் அற்றதாகவே தோன்றுகின்றது.

இது நீதிக்குப் புறம்பானது என்பதை நாங்கள் எண்ணுகிறோம். அரசும், அரசியல்வாதிகளும் சமூக ஆர்வலர்களும் இதனை அலட்சியப்படுத்தாது தொடர்ந்தும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக போராட வேண்டும் என்பது எங்களுடைய கருத்தாக இருக்கின்றது. அலட்சியப் போக்கை நினைத்து அவர்கள் மிகவும் மன வேதனை அடைகிறார்கள்.

இவர்களின் இருப்பிற்கு அர்த்தமற்ற ஒரு நிலை ஏற்படுகின்றமையினால் மோசமான ஒரு நிலை இவர்களின் வாழ்வில் தோன்றியுள்ளது. இவர்களுக்கு ஒரு விமோசனத்தை கொடுப்பதற்கு நாங்கள் எல்லோரும் ஒன்றுபட வேண்டும். குரல் கொடுக்க வேண்டும்.

குறிப்பாக இவர்களின் விடுதலைக்காக குரல் கொடுத்து வருகின்றவர்களுக்கு நாம் ஒத்துழைத்து இன்னும் இவர்களின் விடுதலைக்கு அதிகமாக குரல் கொடுக்க வேண்டும்.

நேரடி குற்றங்கள், கொலைகள் பல செய்தவர்கள் விடுதலை செய்யப்பட்டு பல பதவிகளை வகித்துக்கொண்டு இருக்கின்ற நிலையில் இந்த அப்பாவி பிள்ளைகள் தொடர்ந்தும் பல ஆண்டுகளாக சிறையிலே வாடிக்கொண்டு இருக்கின்றார்கள்.

இவர்களின் குடும்பம் பாதிக்கப்படுகின்றது. காலம் கடந்து இவர்களை விடுதலை செய்வார்களாக இருந்தால் இவர்களின் வாழ்வில் எவ்வித அர்த்தமும் இருக்காது. பிள்ளைகள் அநாதைகளாக இருக்கின்றார்கள்.

எனவே இவர்களை உடனடியாக விடுதலை செய்ய அரசியல்வாதிகள், அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவர்களின் வாழ்வை மேம்படுத்த அனைவரும் ஒன்றுபட வேண்டும். தற்போது வரை அநுராதபுரம் சிறைச்சாலையில் 105 அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சுமார் 11 வருடங்களாக 6 அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 12 அரசியல் கைதிகள் மோசமாக சிறையில் இருக்கின்றனர். இவர்கள் எல்லோரும் 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவருக்கு மட்டும் மன்னாரில் வழக்கு உள்ளது. ஏனையோருக்கு வவுனியாவில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. காலதாமதத்துடனே இவர்களின் வழக்கு விசாரனைகள் இடம் பெற்று வருவதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். எனவே இவர்களின் விடுதலையை துரிதப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் மன்னார் ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் எஸ்.ஏ.அசீம் மௌலவி மற்றும் பிரஜைகள் குழுவின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர். (9-285)



யோகி அழகுக்கலை நிலையத்தின் கேக் கண்காட்சி கடந்த முதலாம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரை நல்லூர் அம்மன் வீதியில் அமைந்துள்ள யோகி அழகுக் கலை நிலையத்தில் நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியைத் திறந்து வைத்தார். (படங்கள்:-ஐ.சிவசங்கர்)

## ‘ஓகஸ்டில் சுபநேரம் இல்லை ;ஒப்பந்தம் ஒத்திவைப்பு’

# ஜனாதிபதியும் ஐ.தே.க. உறுப்பினர்களும் பாலும் தேனும் போல் உறவாடுகின்றனர்

## அமைச்சர் காமினி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஐக்கியத் தேசியக் கட்சி தலைமையிலான புதிய கூட்டணியை உருவாக்க ஓகஸ்ட் மாதத்தில் சுபநேரம் இல்லாமையால் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை அதனை பிற்போடுவதாக அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஜனாதிபதியும், ஐ.தே.க உறுப்பினர்களும் பாலும் தேனும் போல் உறவாடிக் கொண்டதாக தெரிவித்த அமைச்சர் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எந்தவித முரண்பாடுகளும் இல்லை எனவும் தெரிவித்தார்.

சில ஊடகங்கள் கட்சிக்குள் பிரச்சினைகள் உள்ளதாக காண்பிக்க முயற்சிப்பதாக தெரிவித்த அவர் ஜனாதிபதி, வேட்பாளர்



தெரிவில் காணப்படும் அனைத்து முரண்பாடுகளையும் களைந்து சிறந்த ஒரு வேட்பாளரை ஐக்கிய தேசியக் கட்சி நியமிக்கும் எனவும் தெரிவித்தார்.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய கூட்டணி எப்போது உருவாக்கப்படும் என ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் வினவியபோது,

ஓகஸ்ட் மாதம் என்பது சிறப்பான மாதம் அல்ல. இந்த மாதத்தில் கையொப்பமிட்டு செய்யும் அனைத்துச் செயல்களும் வெற்றியளிக்காது. எனவே செய்யும் செயல்களை செப்டெம்பர் மாதத்தில் செய்ய வேண்டும் என்றார்.

இங்கு அமைச்சர் சஜித் பிரேமதாஸவும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

இதன்போது அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பை புதன்கிழமைகளில் நடத்தாமை தொடர்பில் வினவப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், குறித்த ஊடக சந்திப்பு நடைபெறாமைக்கான காரணம் தனக்கு தெரியாது எனவும் அதற்கான காரணத்தை தேடிப் பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் தனது தகுதி தொடர்பில் எவரும் அறிய வேண்டியதில்லை எனவும், 24 மணித்தியாலங்களும் அது தொடர்பிலேயே விழிப்புடன் இருப்ப தாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவேன் என நாட்டு மக்கள் எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்த சஜித், அது தொடர்பில் குழப்பமடையாமல் அமைதியாக இருந்து அவதானிக்குமாறும் கேட்டுக்கொண்டார். (இ-7)

# விபத்தில் மனைவி, மகள் பலி பறிகொடுத்த தந்தை கதறல்



(களுத்துறை)

கடந்த வாரம் இரண்டு பேருந்துக்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டமையால் ஏற்பட்ட விபத்தில் 6 பேர் உயிரிழந்த நிலையில் 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த விபத்தில் 49 வயது தாய் மற்றும் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற மகள் ஆகியோர் உயிரிழந்தனர். இந் நிலையில் அவர்கள் அணிந்திருந்த தங்க நகைகள் உட்பட பல பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக குடும்பஸ்தர் ஒருவர் கண்ணீருடன் தெரிவித்தார்.

“அதிகாலை 3.45 மணியளவில் மனைவி மற்றும் மகளை பேருந்தில் ஏற்றி விட்டு வீட்டிற்கு வந்து செய்தி பார்க்கும் போதே விபத்து குறித்து அறிந்து கொண்டேன். பிள்ளைகளுக்காக நான் இராணுவத்தில் இருந்து விலகினேன். அதற்கு பலனாக மகள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகினார். மகள் பட்டம் பெற்ற மகிழ்ச்சியில் இருந்த எங்களுக்கு இந்த மரணம் பேரதிர்ச்சியாக உள்ளது. இந்தத் துக்கத்தை எப்படி தாங்கிக் கொள்வது.

மகள் படிப்பில் சிறந்தவர். உயிரிழந்த மகள் கிராமத்திலுள்ள பாடசாலை ஒன்றிலேயே கற்றார். 3 ஏ சித்திகளைப் பெற்று கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகினார்.

மகள் தன்னுடன் கற்ற மாணவனை காதலித்தார். இரண்டு வீட்டாரினதும் அனுமதியுடன் திருமணம் செய்து கொள்ளத் தயாராக இருந்தார். காதலித்த இளைஞர் உயர் கற்கைக்காக ஜப்பான் சென்றுள்ளார். மகளையும் ஜப்பான் அழைத்துச் செல்வதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார். இந்த வருடம் ஒக்டோபர் மாதம் ஜப்பான் செல்வதற்கு மகள் தயாராக இருந்தார்.

மகளின் ஒரு காலில் காயம் ஒன்று ஏற்பட்டது. அதற்கு சிகிச்சை பெறுவதற்காக அதிகாலை பேருந்தில் மனைவியுடன் சென்றார். அவர்களை பேருந்தில் ஏற்றிவிட்டு வந்து 6 மணியளவில் செய்தி பார்த்தேன். அந்த பேருந்து விபத்துக்குள்ளாகியிருந்தது. உடனடியாக மகள் மற்றும் மனைவிக்கு அழைப்பை ஏற்படுத்தினேன். இருவரும் பதிலளிக்கவில்லை. களுத்துறையில் இருக்கும் நண்பரைத் தொடர்பு கொண்டு நாகொட வைத்தியசாலைக்குச் சென்று பார்க்குமாறு கூறிவிட்டு நானும் சென்றேன்.

அங்கு எனது மகள் மற்றும் மனைவியின் சடலத்தையே பார்க்கக் கிடைத்தது. இதன்போது வைத்தியசாலை ஊழியர் ஒருவர் இருவரதும் சடலங்களில் இருந்த நகைகள் எனக்கூறி என்னிடம் சிறிய பொதி ஒன்றை வழங்கினார். அப்போது நான் அதிர்ச்சியில் இருந்தமையால் அதில் இருப்பதை பார்க்கவில்லை. பின்னர் பார்க்கும் போது அவை தங்கம் அல்ல போலியானதென தெரியவந்தது. எனினும் யாரிடமும் முறைப்பாடு செய்யவில்லை” என தெரிவித்தார். (ஐ)

# வன்முறைச் சம்பவங்கள், துன்புறுத்தல்களை உடனுக்குடன் அறிவிக்குமாறு கோரிக்கை

## பாதுகாப்பு அமைச்சு விசேட நடவடிக்கை

(கொழும்பு)

தனிநபர் ஒருவரால் அல்லது குழுவொன்றால் சட்டத்திற்கு முரணாக இடையூறுகள், துன்புறுத்தல்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டால் அவை தொடர்பில் முறைப்பாடளிப்பதற்கு அல்லது தகவல் வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அதற்கிணங்க தேசிய பொலிஸ் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவு மற்றும் உடனுக்குடனான முறைப்பாட்டுத் தளம் ஆகியவற்றில் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் பாதுகாப்பு அமைச்சால் மேற்கொள்ளப்பட்டன.

காணாமல் போனோர் குடும்பங்களின் அங்கத்தவர்கள், மனித உரிமை மீறல்களுக்காக குரல் கொடுக்கும் நபர்கள் அடங்கலாக பொதுவான சட்ட முறையற்ற கண்காணிப்புக்கள் மற்றும் துன்புறுத்தல்கள் பற்றிய சம்பவங்களைப் பாதுகாப்பு அமைச்சு அவ்வப்போது அறிந்து வந்துள்ளது.

அரசாங்கம் சகல பிரஜைகளினதும் பாதுகாப்பை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உறுதி செய்வதற்கு கடமைப்பட்டுள்ளது.

எனவே பொலிஸாருக்கு ஏதாவது சம்பவம் பற்றி முறைப்பாடு செய்யப்படுகின்ற நேரத்தில் பொலிஸார் அத்தகைய சம்பவங்கள் தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்தி, சட்டத்திற்கு அமைய விசாரணைகளை நடத்துகின்றனரா? என்பதையும் அரசாங்கம் உறுதி செய்ய வேண்டியுள்ளது.


எனவே எவரேனும் தனிநபர் ஒருவரால் அல்லது நபர்கள் குழுவால் சட்ட முறையற்ற விதத்தில் இடையூறுகள் விளைவிக்கப்பட்டால் அல்லது துன்புறுத்தப்பட்டால், வன்முறைச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டால் அல்லது அத்தகைய செயல்களால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டால், அத்தகைய செயல்களை அறிந்தால் அவை தொடர்பில் அறிவிக்க தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவை தொடர்பான தகவல்களை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 1960 என்ற அவசர தொலைபேசி இலக்கம் அல்லது 011 510 7722 என்ற இலக்கத்திற்கு அழைத்துத் தெரிவிக்கலாம்.

1996 , 011 250 5575 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யலாம். இலங்கை பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவிற்கு 119 என்ற இலக்கத்திற்கு அழைப்பை மேற்கொண்டும் முறைப்பாடளிக்கலாம்.

தொலைபேசி இலக்கங்கள் தவிர TELL IGP என்ற உடனுக்குடனான முறைப்பாட்டுத் தளத்திலும் முறைப்பாடுகளைப் பதிவு செய்யலாம். www.telligp.police.lk என்ற இணையத்தள முகவரிக்கூடாக குறித்த இணையத் தளத்திற்குள் பிரவேசித்து முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியும் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)






தரம் 11 மாணவர்களுக்கான (பெண்கள்) இலவச செயலமர்வின் முதல்நாள் செயலமர்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில், துணுக்காய் வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சக்திதரன் தலைமையில் ஆரம்பமானது. இதில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்து கொண்டார்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 80 | 90 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 280 | 240 | 300 |
| தக்காளி | 140 | 120 | 140 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 150 | 100 | 100 |
| கோவா | 80 | 60 | 80 | 60 | 80 |
| கரட் | 100 | 150 | 160 | 130 | 160 |
| பூசணி | 80 | 50 | 80 | 50 | 60 |
| புடோல் | 50 | 60 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 150 | 140 | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 120 | 130 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 110 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 160 | 150 | 160 | 140 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 80 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 60 | 100 |
| பயற்றங்காய் | 60 | 70 | 60 | 60 | 60 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 | 70 | 100 |
| பீற்றூட் | 80 | 60 | 80 | 60 | 80 |
| கறிமிளகாய் | 200 | 160 | 180 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 80 | 70 | 100 | 70 | 60 |
| போஞ்சி | 120 | 200 | 200 | 60 | 160 |
| கத்தரிதம்பள்ள | 80 | 60 | 80 | 50 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 350 | 400 | 400 | 280 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 | 140 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 180 | 200 | 100 | 200 |
| முள்ளங்கி | 80 | 50 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | 60 | 120 | 50 |




# அதிசய மோதிரம்



முன்னொரு காலத்தில் கிராமம் ஒன்றில் ஒரு விவசாயி வாழ்ந்து வந்தான். செய்வதற்கு வேலையும் கிடைக்காமல் அப்படி வேலை கிடைத்தாலும் அதன் மூலம் போதிய வருமானம் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்தான்.

அந்த சமயத்தில் ஒரு நாள்.... தேவதை ஒன்று அவனிடம் வந்தது.

அந்தத் தேவதையிடம் அவன், தனது வாழ்க்கையில் அவன் படும் கஷ்டங்களையெல்லாம் சொன்னான். தனக்கு ஒரு விடிவு காலம் வருமாறு வழிவகை செய்ய வேண்டுமென்றும் தேவதையிடம் வேண்டிக் கொண்டான்.

"நான் சொல்கிறபடி செய்.... நேராக இதோ எதிரே தெரியும் காட்டுக்குள் செல். அங்கு பல வகையான மரங்கள் உள்ளன. அவற்றில் எல்லா மரங்களையும் விட ஒரு மரம் உயரமாக வளர்ந்து நிற்கும். அந்த மரத்தின் பெயர் பைன் மரம். அதை அப்படியே வெட்டிப் போடு. அப்புறம் அதிர்ஷ்டம் உன்னைத் தேடி வரும். உன் கஷ்டங்கள் எல்லாம் தீரும்" என்று அந்த தேவதை ஏழை விவசாயிக்கு வழிகாட்டியது.

அடுத்த நாளே, அந்த ஏழை விவசாயி கையில் கோடரியை எடுத்துக் கொண்டு காட்டைச் சென்றடைந்தான். காட்டுக்குள் இருந்த பைன் மரத்தைக் கண்டுபிடிக்க இரண்டு நாட்கள் அங்குமிங்கும், தேடி அலைந்தான். இறுதியில் ஓங்கி உயர்ந்து நின்று கொண்டிருந்த பைன் மரத்தைக் கண்டு, மகிழ்ச்சி அடைந்தான். பிறகு, தனது கையிலிருந்த கோடரியால் பைன் மரத்தின் அடிப்பாகத்தை ஓங்கி வெட்டினான். அது தரையின் மீது விழும் போது, அதன் முனைப் பகுதியில் இருந்து ஒரு பறவைக் கூடும் விழுந்தது. அக்கூட்டில் இரண்டு முட்டைகள் இருந்தன.

விழுந்த வேகத்தில் அந்த முட்டைகள்உருண்டோடிஉடைந்தன. ஒரு முட்டையிலிருந்து ஒரு கழுகுக் குஞ்சு வெளிப்பட்டது. இன்னொரு முட்டையிலிருந்து, ஒரு மோதிரம் வெளிவந்து உருண்டோடியது.

கழுகுக் குஞ்சு பெரிதாக வளர்ந்து கொண்டே போனது. அந்த விவசாயியின் பாதியளவுக்குப் பெருத்து விட்டது. இந்தக் காட்சியைக் கண்டு விவசாயிக்கு ஒரே ஆச்சரியம். அவனால் தனது கண்களையே நம்ப முடியவில்லை. அந்தக் கழுகு தனது சிறகை அடித்துப் பறக்கும் முன் விவசாயியைப் பார்த்து, "எனது அடிமைத்தளத்திலிருந்து எனக்கு விடுதலை அளித்துவிட்டீர்கள். உங்களுக்கு எனது நன்றி.

அடுத்த முட்டையிலிருந்து வெளிவந்துள்ள மோதிரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அது ஓர் ஆச்சரியமான அதிசய மோதிரம். நீங்கள் எதைக் கேட்டாலும் அது கொடுக்கும். ஆனால், அதை ஒரே ஒரு தடவ்வ பயன்படுத்தி விட்டால், அது சாதாரண மோதிரம் ஆகிவிடும். இதுதான் அந்த மோதிரத்தின் அற்புத சக்தியாகும். எனவே, ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுங்கள். அசட்டையாய் இருந்து விட்டால், பின்னர் வருத்தப்பட நேரிடும்" என்று கழுகு சொல்லிவிட்டு உயரே பறந்து கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தது.

மிகவும் மகிழ்ச்சி அடைந்தான் விவசாயி. அந்த மோதிரத்தை எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கிப்புறப்பட்டான். செல்லும் வழியில், அங்குள்ள நகைக் கடைக்குச் சென்றான்.

நகை வணிகரிடம் அந்த மோதிரத்தைக் காட்டி, "இதன் மதிப்பு என்ன இருக்கும்?" என்று கேட்டான். மோதிரத்தை வாங்கிப் பார்த்த நகை வணிகர், "இதற்கு ஈடாக யாரும் ஒரு புல்லுக்கட்டு கூடத் தரமாட்டார்." என்று கூறினான்.

நகை வணிகர் கூறியதைக் கேட்ட விவசாயி சிரித்துக் கொண்டே அவரிடம், "இந்த மோதிரத்தின் மகிமையைப் பற்றி உனக்கு தெரியாது. உலகத்திலுள்ள எல்லா மோதிரங்களையும் சேர்த்தாலும் இதன் மதிப்புக்கு ஈடாகாது," என்று கூறிய விவசாயி, அந்த மோதிரம் தனக்கு எப்படிக் கிடைத்தது என்றும் விளக்கமாகக் கூறினான்.

விவசாயிகூறியதைக்கேட்டு, மோதிரத்தின் மகிமையை அறிந்து கொண்ட நகை வணிகனின் உள்ளத்தில் பேராசை தலை தூக்கியது. அவன் அந்த மோதிரத்தை அபகரிக்க திட்டம் போட்டான்.

விவசாயியிடம் வணிகர் மிகவும் கனிவாக, "ஐயா, நீங்கள் இன்று இரவு எனது வீட்டில் தங்கிவிட்டு, நாளை காலையில் செல்ல வேண்டும் என்பது என் விருப்பம்," என்று கூறினான். விவசாயியும் அதற்குச் சம்மதித்தார்.

அன்று இரவு விவசாயிக்கு நல்ல அறுசுவை விருந்து. விருந்தின் முடிவில் திராட்சை ரசம் வேறு. அதை வாங்கிக் குடித்த விவசாயி சிறிது நேரத்தில் மயங்கி விழுந்தான்.

அந்த சமயம் பார்த்து விவசாயியின் கையிலிருந்த மோதிரத்தை திருடிக் கொண்டு, ஒரு சாதாரண மோதிரத்தை மாட்டிவிட்டான் வணிகன்.

விவசாயி நன்றாகத் தூங்கினான். "மோதிரத்தைப் பயன்படுத்தி உலகின் முதல் பணக்காரனாக ஆகிவிடலாம்' என்று எண்ணி ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தான் வணிகன்.

மறுநாள் பொழுது விடிந்தது. சிறப்பான விருந்து கொடுத்தமைக்கு நன்றி சொல்லிவிட்டு, நகை வணிகனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு தனது வீட்டை நோக்கிப் புறப்பட்டான் விவசாயி.

நகை வியாபாரியோ, அந்த மாய மோதிரத்தைக் தன் கைவிரலில் அணிந்துகொண்டு, ஒய்யாரமாகத் தன் இருக்கையில் அமர்ந்தவாறே, மாய மோதிரத்தைப் பார்த்து, "எனக்கு ஐந்தாயிரம் பொற்காசுகள் வேண்டும்," என்று கேட்டான்.

மோதிரம் தனக்குள்ளாக, "அடப்பாவி! ஒரு அப்பாவி ஏழையை ஏமாற்றி, அவனிடமிருந்து என்னைத் திருடி, என் மூலம் உலகப் பணக்காரன் ஆகப் பார்க்கிறாயா? இதோ, உன் கதையை இப்போதே முடித்து விடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டது.

நகை வணிகன் கேட்டுக் கொண்ட மாதிரியே, அந்த மோதிரம் தங்கக் காசுகளை அவனது தலையில் மழை போல் பெய்து கொண்டிருந்தது.

தங்கக் காசுகள், "பட் பட்' என்று அவனது தலை மீது விழுந்தன.

"தலை வலிக்கிறது, போதும் போதும்!" என்று கத்தினான். ஆனால், தங்க மழை நின்றபாடில்லை.

கடைசித் தங்கக் காசு அவனது தலையில் விழுந்தவுடன் தங்க மழை ஓய்ந்து போனது.

ஆனால், விழுந்து கிடந்த தங்கக் காசுகளை அந்த வணிகனால் எடுக்க முடியவில்லை. காரணம், தங்க மழை ஓய்வதற்குமுன்பே, அவனது உடலை, விட்டு அவனது உயிர் போய் விட்டது.

தங்க மழை பெய்ததால், நகை வியாபாரி இறந்துவிட்டார் என்ற செய்தி காட்டுத் தீ போல் பரவியது.

நகை வியாபாரியின் வீட்டை நோக்கி ஓடினர். நகை வியாபாரி மீது தங்கக் காசுகள் குவிந்து கிடந்தன.

"இப்படி மழைபோல் தங்க காசுகள் வந்தால், தீமையும் வராமலா போய் விடும்" என்று வந்தவர்கள் பேசிக்கொண்டனர்.

பின்னர் ஆளுக்கு இரண்டு தங்கக் காசுகள் எடுத்துக் கொண்டு அவரவர் வீட்டை நோக்கிச் சென்றனர்.

பின்னர் நகை வியாபாரியின் கைவிரலில் இருந்த அந்த மாயமோதிரம் தானே கழன்று, அந்த விவசாயியின் வீட்டை நோக்கி பறந்து சென்றது.

## வாழ்க்கைக்கான தத்துவங்கள்

- எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உள்ளன. ஒன்று காலம், இன்னொன்று மௌனம்.
- நீ சிரித்து பார் உன் முகம் உனக்குப்பிடிக்கும், மற்றவர்களை சிரிக்க வைத்துப்பார் உன் முகம் எல்லோருக்கும் பிடிக்கும்.
- நட்பையும் மகிழ்ச்சியையும் இரட்டிப்பாக்க அருகிலிருப்பவர்களுக்கு கொடுத்து விடுங்கள்.
- மனிதன் தான் செய்யும் தவறுகளுக்குச்சிறந்த வக்கீலாகவும் பிறர் செய்த தவறுகளுக்குச் சிறந்த நீதிபதியாகவும் இருக்க விரும்புகிறான்.
- அழும்போது தனிமையில் அழு, சிரிக்கும்போது நண்பர்களோடு சிரிகூட்டத்தில் அழுதால் நடிப்பு என்பார்கள், தனிமையில் சிரித்தால் பைத்தியம் என்பார்கள்.
- நல்லவனாய் இரு. ஆனால் அதை நிரூபிக்க முயற்சி செய்யாதே. அதைவிட முட்டாள்தனமான விடயம் எதுவுமில்லை.

## விடுகதைகளும் விடைகளும்

- பழம் காயாகி பந்தியிலே விருந்தாகும். அது என்ன?
  **எலுமிச்சை ஊறுகாய்**
- ஆவியில் குளிக்கும் அருபசியை தீர்க்கும். அது என்ன?
  **இட்லி**
- நீரில் நீந்தும் நிலத்தில் தாவும். அது என்ன?
  **தவளை**
- நிலத்தில் உணவு, ஆகாயத்தில் வாழ்வு. அது யாருக்கு?
  **பறவைகள்**
- விதையின்றி முளைக்கும். வேரின்றி கிளைக்கும். அது என்ன?
  **கொம்பு**

நேரத்தை வீணாக்கும் போது கடிகாரத்தைப் பார்.ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை

- விவேகானந்தர்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நல்லூர் முருகனுக்கு ஓர் அன்பு மடல்

நல்லூர்க் கந்தப் பெருமானுக்கு நமஸ்காரம். தங்களை வழிபாடு செய்வதற்காக கடந்த ஆறாம் திகதி தாங்கள் வீற்றிருக்கும் நல்லூர் திருப்பதிக்கு வந்தேன்.

கொடியேற்றத்தைக் கண்டு விட வேண்டும் என்பதுதான் என் ஒரே நோக்கம்.

ஆனால் இம்முறை ஆலயச் சூழலில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. எதற்காக என்பது எனக்குத் தெரியவில்லை.

சீருடை தரித்த ஒருவர் என்னைச் சோதனையிட முற்பட்டார். நான் முருகனின் ஆள் என்றேன். முருகனின் ஆதரவாளர்களைத்தான் சேதனையிடுகிறோம் என்றார் அந்த சீருடை தரித்தவர்.

இஃது என்ன? ஆட்சி மாற்றம் ஏதும் ஆகியிருக்குமோ என்று பயந்தேன்.

சிலவேளை சூரர்கள் முருகனைத் தம் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டார்களோ என்ற ஏக்கமும் என்னைச் சூழ்ந்து கொண்டது. நிலைமையை யாரிடமும் கேட்டறிய முடியவில்லை.

சோதனை நடத்துபவர்களை மேற்பார்வை செய்கின்ற அதிகாரி ஒருவர் அவ்விடத்தில் நின்றார்.

அவரை அணுகி, ஐயா, நான் முருகனின் ஆதரவாளன். சூரனுக்கு எதிரானவன். என்னையேன் சோதிக்கிறீர்கள் என்று கேட்டேன்.

அவர் மெல்லிய சிரிப்புடன் நான் சூரன் தரப்பைச் சேர்ந்தவன் என்றார். நிலைமையைப் புரியமுடியவில்லை.

திகைத்து நின்றேன். என் திகைப்பைப் பார்த்த அந்த அதிகாரி தானே குரல் கொடுத்தார்.

முன்பெல்லாம் நாங்கள் உங்களைச் சோதித்தது உண்டு. அது உங்களிடம் இருந்து எங்களைப் பாதுகாக்க.

இப்போதும் நாங்கள் உங்களைச் சோதிக்கின்றோம். இது உங்களைப் பாதுகாக்க என்றார்.

இவ்வாறு அந்த அதிகாரி கூறியதும் என் குழப்பம் மேலும் அதிகரித்தது. சோதனையிடுபவர்கள் அவர்கள். சோதிக்கப்படுபவர்கள் நாங்கள்.

அதிலும் சோதனை இரண்டு வகைப்படுகிறதாம். முன்பு எங்களைச் சோதித்தது தங்களைப் பாதுகாப்பதற்கு. இப்போது எங்களைச் சோதிப்பது எங்களைப் பாதுகாக்கவாம். இஃது எங்ஙனம் பொருத்துடையது. என் கேள்வி என்னைத் துளைத்துக் கொண்டது.

பரவாயில்லை சோதிக்கட்டும். எத்தனை சோதனைகளைத் தாண்டியவர்கள் நாங்கள். எங்களின் வாக்குகளால் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளைப் பெற்றவர்களே எங்களுக்கு சோதனை தரும்போது இதெல்லாம் ஒரு சோதனையா என்ன?

தலையில் தொட்டு முழங்கால் வரையில் சோதனை முடிவுறுகிறது. சோதனை முடிவுற்ற கையோடு வேகமாக நல்லூரானை நோக்கிச் செல்கிறேன். ஆலய முன்றலில் மணிமண்டபத்தில் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் என்னைப் பார்க்கிறார்.

அனுட்டான விதி பற்றிப் பேசுகிறார். சிவ தீட்சை பெற்றவர்கள் நீராடி திருநீற்றை நீரில் குழைத்து சிரசில், நெஞ்சில், தோளில், கையில், முழங்காலில் முக்குறிகளாக அணிதல் வேண்டும்.

ஓ! அனுட்டானம் பார்த்து வராததால்தான் அந்த ஆள் நமக்கு அனுட்டானம் செய்தாரோ. நமக்கு விதிக்கப்பட்டதை நாமே பின்பற்றினால் எல்லாம் சரியாகும் என்பதை முருகா நீ எமக்கு உணர்த்தி நின்றாய் போற்றி.

## தமிழர்களின் பிரச்சினைக்கு உணர்வுபூர்வமாக குரல் கொடுத்தவர் சுஷ்மா- த.தே.கூ.இரங்கல்

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சரும் பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான சுஷ்மா சுவராஜின் இழப்பு ஈடு செய்ய முடியாததாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்காக உணர்வுபூர்வமாக குரல் கொடுத்த ஒரு தலைவர் அவர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த போது தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் மிகக் கவனமாக செயற்பட்ட ஒரு தலைவராவார். குறிப்பாக இலங்கைக்கு வருகை தந்த அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திக்க அவர் தவறியதில்லை என்பதோடு அது போன்ற அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தார்.

இந்து சமுத்திர விடயம் தொடர்பாக இலங்கைக்கு வருகை தந்திருந்த போது . தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனையும் என்னையும் சந்தித்து பேசியிருந்த அவர், தமிழ் மக்களுக்கு விரைவில் அரசியல் தீர்வை வழங்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு மிகவும் தீர்க்கமாகக் கூறியுள்ளதாகத் தெரிவித்தார்.

சுஷ்மா சுவராஜ் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த போது இந்திய பாராளுமன்ற குழுவிற்கு தலைமை தாங்கி இலங்கைக்கு வருகை தந்திருந்தார். இந்த விஜயத்தின் போது இலங்கை தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பில் காத்திரமான அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தார். மகிந்த ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் இரா.சம்பந்தனுடன் இணைந்து விரைவில் அரசியல் தீர்வை வழங்குமாறு வலியுறுத்தியிருந்தார்.

தமிழர் தொடர்பான பிரச்சினைகள் மாத்திரமின்றி ஏனைய பல விடயங்களிலும் அவர் அவதானம் செலுத்தியதோடு அவற்றுக்கான தீர்வினை வழங்கியுள்ளார்.

கடந்த காலங்களில் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றமை தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் முன்னாள் அமைச்சர் மகிந்த அமரவீர ஆகியோருடன் நானும் இந்தியா சென்றிருந்தேன்.

அதன் போது இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடிக்கின்றமை தவறு என்று குறிப்பிட்டிருந்தார். அத்தோடு இவரது தலையீட்டிலேயே இழுவைப் படகுகள் முற்றாக தடைசெய்யப்பட்டன. அவை தொடர்பான முழுமையான அறிக்கையும் இவரால் வெளியிடப்பட்டது.

தனது தரப்பில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் நியாயத்தின் பக்கம் நின்று அதற்காக போராடிய இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவிக்கின்றது என்றும் சுமந்திரன் தெரிவித்தார். (இ-7)

### அரச சேவையில் இணைக்கக்கோரி

## வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஆளுநர் ராகவனிடம் கடிதம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் நேற்று புதன்கிழமை வடக்கு மாகாண சபையில் இடம் பெற்ற பொதுமக்கள் சந்திப்பின் போது தம்மையும் அரசசேவையில் இணைத்துக்கொள்ளுமாறு கோரி வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனிடம் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

அவர்கள் தமது கோரிக்கைக் கடிதத்தில் 01.08.2019 அன்று வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தில் 2012 இல் இருந்தான வெளிவாரிப் பட்டதாரிகள், 2017, 2018 இல் வெளியேறிய உள்வாரி, வெளிவாரி மற்றும் HNDA இணைத்துக் கொள்ளாமை வேதனையளிக்கிறது.

பாதிக்கப்பட்ட வேலையற்ற பட்டதாரிகளாகிய நாம் சில கோரிக்கைகளை முன்வைத்து இந்தக் கடிதத்தைச் சமர்ப்பிப்பதுடன் எமது பிரச்சினைக்கான தீர்வினை சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு பெற்றுத் தருமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனம் உள்வாரி, வெளிவாரி மற்றும் HNDA என்ற வேறுபாடின்றி அனைத்து வேலையற்ற பட்டதாரிகளுக்கும் வழங்கபடல் வேண்டும்.

இன்று வரை பதிவு செய்யப்படாத, 2017 இல் இருந்து இன்று வரை பட்டப்படிப்பை நிறைவு செய்து வெளியேறிய பட்டதாரிகள் அனைவரையும் பதிவுக்குட்படுத்தி தற்போதைய பட்டதாரிகள் நியமனத்தில் உள்ளீர்க்கப்படல் வேண்டும். 2017 வரை நேர்முகத் தேர்வில் பங்கு பற்றிய வேலையற்ற பட்டதாரிகளை கவனத்தில் கொள்வதோடு இன்று வரை வெளியேறிய பதிவு செய்யப்படாத ஏனைய பட்டதாரிகளையும் இணைத்துப் பட்டதாரிகள் அனைவருக்குமான பட்டதாரிகள் நியமனத்தை உறுதிப்படுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளை உள்ளடக்கி வடக்கு ஆளுநரிடம் கடிதத்தைக்கையளித்தனர்.(இ-30)

## தேசியப்பட்டியலில் இருந்து சாந்த எம்.பி.இராஜினாமா

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து சாந்த பண்டார இராஜினாமாச் செய்தார்.

குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாலிந்த திஸாநாயக்கவின் மறைவால் ஏற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்தை நிரப்புவதற்காக அவர் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகினார்.

கடந்த 2010 ஆம்ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட சாந்த பண்டார 2015 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் குருநாகல் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்டபோதும் வெற்றி பெறத் தவறியிருந்தார்.

இருப்பினும் இத் தேர்தலில் சாலிந்த திஸாநாயக்கவின் வாக்குகளுக்கு அடுத்தபடியாக சாந்த பண்டார வாக்குகளைப் பெற்றிருந்தமையால் குருநாகல் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினராக அவர் விரைவில் பதவி ஏற்பார் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.(இ-7)

### அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும்

## ஹிஸ்புல்லா விடுதலை!

(கொழும்பு)

தன் மீது சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் முழுமையாக தான் விடுதலை செய்யப்பட்டதாக கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ. எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்திற்கு முன்பு நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தன் மீது முன்வைக்கப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுக்களும் பொய்யானவை என தீவிரவாதத் தடுப்புப் பிரிவு மற்றும் குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது எனத் தெரிவித்தார்.

அத்துடன் மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழக நிறுவனத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளோம்.

எனினும் அது தொடர்பில் இதுவரையில் இறுதித் தீர்மானம் எடுக்க வில்லை எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## சத்திய தரிசனம்

### வந்தால் வரட்டும் சோதனை



❖ மனிதனை சூழ்நிலை தான் உருவாக்குகிறது என நினைக்கின்றனர். ஆனால், அவனுடைய மனம் அதைவிட முக்கியமான காரணமாக இருக்கிறது.

❖ எல்லா ஆசைகளையும் இறைவனிடமே அர்ப்பணித்து விடுங்கள். மனச் சமநிலையுடன் இருக்க அமைதியைத் தரும் பழக்கங்களை மேற்கொள்ளுங்கள்.

❖ நீங்கள் நல்ல செயலைச் செய்தும் கூட உங்களை சிலர் கோபிக்கலாம். "இது தான் உலகின் இயல்பு" என்று புன்னகையுடன் ஏற்றுக் கொள்ளப் பழகுங்கள்.

❖ சோதனை நேர்ந்தால் வளைந்து கொடுக்காதீர்கள். எல்லாம் நன்மைக்காகவே என்று எண்ணி குறிக்கோளை நோக்கி விரைந்து செல்லுங்கள்.

❖ என்ன செய்தாலும் மற்றவர் நம்மைப் பாராட்ட வேண்டும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டாம். உங்களுக்கு நீங்களே உற்ற நண்பனாகச் செயற்படுங்கள்.

❖ அறிவாளியாக இருந்தாலும், செல்வந்தராக இருந்தாலும் அவர்களது அறிவும், செல்வமும் ஏழை, எளியவர்களுக்கு பயன்படுவதாக இருக்கவேண்டும்.

# மேற்கிந்தியத்தீவுகளை வெள்ளையடித்து கிண்ணத்தை வென்றது இந்திய அணி





மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணியை வெள்ளையடித்து 3-0 என இந்திய தொடரை கைப்பற்றி அசத்தியுள்ளது.

கயானாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது. இதையடுத்து முதலில் களம் இறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 146 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பொல்லார்டு அதிகபட்சமாக 58 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்திய தரப்பில் சிறப்பாக பந்து வீசிய தீபக் சாஹர் 3 ஓவர்கள் வீசி 1 மெய்டின். 4 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளை கைப்பற்றி அசத்தினார்.

147 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கி ஆடிய இந்திய அணி 19.1 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 150 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஹோலி 59 ஓட்டங்களும். ரிஷப் பந்த் ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களும் எடுத்து வெற்றிக்கு வழிவகுத்தனர். ஆட்ட நாயகனாக இந்திய பந்து வீச்சாளர் தீபக் சாஹர் தெரிவு செய்யப்பட்டார். தொடர் நாயகனாக இந்திய வீரர் குருணல் பாண்ட்யா தெரிவு செய்யப்பட்டார். (க)





**கரவெட்டி இளைஞர்களின் ஏற்பாட்டில் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி கடந்த 4 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கரவெட்டி சோனப்பு சவாரித்திடலில் இடம்பெற்றது. ஜெ.துசாந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன், சிறப்பு விருந்தினராக நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி M.M.H. ஜெயதிலக, கௌரவ விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலக சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஆ.ரகுநாதன், வடமராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் உ.சுரேஸ்குமார், கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி அதிபர் க.கண்ணன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். ஒவ்வொரு குழுக்களிலும் வெற்றி பெறும் முதல் 4 இடங்களை பெறும் போட்டியாளருக்கு பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப்பட்டது. அத்தோடு ஒவ்வொரு குழுவிலும் முதலாம் இடத்தை பெற்ற போட்டியாளருக்கும் துவிச்சக்கரவண்டியும் பரிசாக வழங்கப்படும். போட்டியில் மூத்த சவாரி வீரரான மகேந்திரமும் இளம் ஓட்ட வீரராக நீர்வேலி கைலக்சனும் பார்வையாளரை கவர்ந்த வீரராக இளவாலையைச் சேர்ந்த தனாட்சனும் தெரிவு செய்யப்பட்டனர். இந் நிகழ்வில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-60)**

# புத்துணர்ச்சி பெறும் இலங்கை அணிக்கு புதிய தேர்வுக்குழு நியமிக்கப்பட்டது

அசந்த டி மெல் தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய தேர்வுக்குழுவை விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த ஒரு நாள் தொடரில் இலங்கை அணி 3-0 என்கிற கணக்கில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது. அதனைத் தொடர்ந்து தற்போது இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணியுடன், டெஸ்ட் மற்றும் இருபது ஓவர் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இந்த நிலையில் நியூசிலாந்து டெஸ்ட் தொடருக்கு எதிரான இலங்கை அணியை, புதிய தேர்வுக்குழு தேர்வு செய்யும் என விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் தேர்வு செய்துள்ள குழுவில், அசந்த டி மெல் தெரிவுக்குழுவின் தலைவராக செயற்படுவதுடன் இலங்கை கிரிக்கெட் அணியின் முகாமையாளராகவும் செயற்படவுள்ளார்.



அவருடன் வினோதன் ஜான் மற்றும் சமிந்த மெண்டிஸ் ஆகியோரும் தேர்வுக்குழுவில் இணைக்கப்பட்டுள்ளனர்.

2019 ஒகஸ்ட் 5 ஆம் திகதி தொடங்கி ஒரு வருட காலத்திற்கு தேசிய தேர்வாளர்களாக பணியாற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ராகுல் ட்ராவிட்டுக்கு நோட்டீஸ் கங்குலி-ஹர்பஜன் கடும் கண்டனம்

இந்தியாவின் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமான பி.சி.சி.ஐ.-யின் நன்னெறி அதிகாரி ஒகஸ்ட் 6 ஆம் திகதி இந்திய ஜம்பவான் ராகுல் ட்ராவிட்டுக்கு நோட்டீஸ் அனுப்பினார்.மத்திய பிரதேச இந்திய கிரிக்கெட் சங்க உறுப்பினர் சஞ்சய் குப்தா. ட்ராவிட் மீது அளித்த புகாரை அடுத்து நோட்டீஸ் அனுப்பியதாக பி.சி.சி.ஐ. வட்டாரம் உறுதிப்படுத்தியுள்ளது.

புகாரின் படி, தற்போதைய என்.சி.ஏ. தலைவராக இருக்கும் ட்ராவிட். ஐ.பி.எல். சென்னை சுப்பர் கிங்ஸ் உரிமையாளரான இந்தியா சிமெண்ட்ஸ் குழுவின் துணைத் தலைவராகவும் பணியாற்றி வருவது முரண்பாடாக இருக்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. ட்ராவிட் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க இரண்டு வாரங்கள் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் ட்ராவிட்டுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது தொடர்பாக இந்திய அணியின் கங்குலி கடுமையாக சாடியுள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் இது தொடர்பாக டுவீட் செய்துள்ள கங்குலி, "இந்திய கிரிக்கெட்டின் புதிய ஃபேஷன்... இந்த ஆதாய முரண்... செய்திகளில் தொடர்ந்து இடம்பெறுவதற்கான சிறந்த வழி. இந்திய கிரிக்கெட்டுக்கு கடவுள்தான் உதவ வேண்டும் எனக் கடுமையாகச் சாடியுள்ளார்.

கங்குலியின் கருத்தை ஹர்பஜன் சிங்கும் வரவேற்றுள்ளார். கங்குலியின் டுவீட்டை குறிப்பிட்டு, "இது உண்மையா....? நாம் எங்கே செல்கிறோம் என்றே தெரியவில்லை. இந்திய கிரிக்கெட்டுக்கு ட்ராவிட்டை விட சிறந்த நபர் கிடைக்கமாட்டார். இதுபோன்ற ஜம்பவான்களுக்கு நோட்டீஸ் அனுப்புவது என்பது அவர்களை அவமதிக்கும் செயல்.

கிரிக்கெட்டின் மேம்பாட்டுக்கு அவர்களின் சேவை தேவை. ஆம், இந்திய கிரிக்கெட்டை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என பதிவிட்டுள்ளார். (க)

# வவுனியாவில் கடும் காற்று ஆறு வீடுகள் சேதம்

(வவுனியா)

வவுனியாவில் நேற்று மதியம் திடீரென வீசிய கடும் காற்று காரணமாக 6 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் 18 பேர் பாதிப் படைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகா மைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வவுனியாவின் பல பகுதிகளிலும் நேற்று மதியம் திடீரென கடும் காற்று வீசியது.

இதனால் வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆண்டியா புளியங் குளம் கிராம அலுவலர் பிரிவில் ஒரு வீடும் 4 அங்கத்தவர்களும், பெரியபுளியாளங் குளத்தில் ஒரு வீடும் 2 அங்கத்தவர்களும், முதலியார் குளத்தில் 2 வீடும் 8 அங்கத்தவர் களும் பாதிப்படைந்துள்ளனர்.

வவுனியா வடக்கு மன்னகுளத்தில் ஒரு வீடும் 3 அங்கத்தவர்களும், நெடுங்கேணி வடக்கில் ஒரு வீடும் ஒரு அங்கத்தவரும் என 6 வீடுகளும், 18 பேரும் பாதிப்படைந் துள்ளனர். குறித்த வீடுகளின் கூரைப்பகுதி கள் காற்றினால் தூக்கி வீசப்பட்டு பகுதி யளவில் சேதமடைந்துள்ளன.

அத்துடன், பல இடங்களில் மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால் ஏ9 வீதி தேக்கவத்தையில் மரம் முறிந்து விழுந்து கார் ஒன்றும் சேதமடைந்துள்ளது. (ம-3.250)

## வடக்கில் தமிழ்...

போதே அவர் இதனைக் கூறினார்.

"முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, நஞ் சுண்டான் குளத்தை புனரமைக்க கோரிய அனுமதியை நான் வழங்கியுள்ளேன். ஏப்ரல் மாதமே அதற்கான அனுமதி வழங் கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு அபிவிருத்தி குறித்து ஜனாதிபதியின் கூட்டத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் நான் புறம்பாக நாற்பது மில்லியன் ரூபாய் வழங்கியுள் ளேன். மேலதிமாக தேவைப்படும் நிதியும் வழங்க முடியும்.

அதேபோல் வவுனியாவில் சிங்கள மக்களை குடியேற்றும் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. கச்சல் சம ணங்குளத்தை புனரமைக்கும் நடவடிக்கை மட்டுமே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவை வனப்பாதுகாப்பு பகுதி. இதில் மக் களை குடியேற்ற முடியாது. எந்த மாவட்டத் திலும் இன ரீதியிலான விகிதாசாரத்தை மாற்றியமைக்க நான் ஒருபோதும் இடமளி க்க மாட்டேன் என்றும் அவர் கூறினார். (ம-3)

## விலக்குப்பிடிக்கச்...

டையை நிறுத்துவதற்காக பேர்த்தியார் விலக்குப்பிடிக்க ஓடிச் சென்றபோது பேரன் வீசிய கத்தி பேர்த்தியாரின் மார்பில் பாய்ந்தது.

இதனை அடுத்து பேரமக்களே பேர்த்தி யாரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும் அவர் உயிரிழந்தார்.

இச் சம்பவம் தொடர்பில் பளைப் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

கத்தியை வீசிய பேரமகனை கிளிநொச்சி பொலிஸார் வைத்தியசாலையில் வைத்து கைது செய்தனர். (ம-3.60)

## மேலும் மூவர்...

அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மேலும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக இதுவரை 116 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## யோசனை...

கான சகல திருத்தங்களும் மேற்கொள்ளப் பட்டு அந்த வரைபுகள் அமைச்சரவை அனு மதிக்காக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

சுற்றுலா தொழில் துறையை வலுப்படுத் தும் நோக்கில் சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்கள், சுற்றுலாவிடுதி கள், சிற்றுண்டிச்சாலைகள் போன்றவற் றுக்கு உள்நாட்டு வங்கியொன்றின் ஊடாக வெளிநாட்டிலிருந்து நிதி கிடைக்குமாக இருந்தால் அந்த தொகைக்கு தேசத்தை கட்டியெழுப்பும் வரி அறவீடு நீக்கப்பட்டுள் ளது.

அதேபோன்று பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு நோக்கங்களுக்காக இறக்கு மதி செய்யப்படும் கப்பல்கள் மற்றும் படகுகளுக்கும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி அறவீடு செய்யப்படமாட்டாது.

கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் உப ஒப் பந்தகாரர்களுக்கு வழங்கப்படும் தேசத்தை கட்டியெழுப்பும் வரிச் சலுகை பிரதான ஒப் பந்தக்காரர்களுக்கும் வழங்க தீர்மானிக்கப் பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக பட்டை தீட்டப்படாத இரத்தினக்கல் இறக்கு மதிக் கான வரியும் நீக்கப்பட்டுள்ளதோடு சுத்தி கரிக்கப்படாத பாம் எண்ணெயைப் பயன் படுத்தி மேற்கொள்ளப்படும் தேசிய உற்பத்தி களுக்கும் வரி விலக்கு அளிக்கப்படும்.

கூட்டுரிமை வீடுகள் வழங்கும்போது விதிக்கப்பட்டிருந்த பெறுமதி சேர் வரியில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன்படி 25 மில்லியன் ரூபாயிற்கு குறைந்த பெறுமதி யுடைய வீட்டுத் திட்டங்களுக்கு பெறுமதி சேர் வரி அறவீடு செய்யப்படாது. பெறுமதி சேர் வரி திருத்தம் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னதாக நொத்தாரிசு கட்டளைச் சட்டத் தின் கீழ் விற்பனை ஒப்பந்தம் மூலம் எழுதப் பட்டுள்ள அல்லது உள்ளூராட்சி மன்ற மொன்றில் இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொண்டுள்ள கூட்டுரிமை வீடுகளுக்கும் இந்த பெறுமதி சேர் வரி அறவீடு செய்யப் படாது.

இதற்கு மேலதிகமாக உள்நாட்டில் விளைவிக்கப்படும் சிவப்பு பச்சை அரிசி யைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தவிட்டு எண்ணெய்க்கு வரி அறவிடப்பட மாட்டாது. 2019ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட யோசனையின் பிரகாரம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டு முதலீட்டுச் சபை நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் ஆடைகளுக்கு அலகு ஒன்றுக்கு அறவீடு செய்யப்படும் 75 ரூபாய் பெறுமதி சேர் வரி 100 ரூபாயாக உயர்த்தப்படும். (ம-3)

## சிங்கள மாணவ...

தும் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2ஆம் மற்றும் 3ஆம் வருடத்தில் பயிலும் சிங்கள மாணவர் களுக்கு இடையே கடந்த திங்கட்கிழமை முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த முரண்பாடு நேற்றுவரை நீடித்த நிலையில், அவர்கள் யாழ்ப்பாணம் பல் கலைக்கழகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நுழைவாயிலுக்கு வெளியில் கைகலப்பில் ஈடுபட்டனர். அந்த இடத்தில் கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்த இராணுவத்தினர் மாணவர்களின் மோதலைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்தனர்.

இந்த மோதலை தனது அலைபேசியில் ஒளிப்படம் எடுத்த பொதுமகன் ஒருவரை சிங்கள மாணவர்கள் சிலர் அவதானித்து இராணுவத்தினரிடம் தெரிவித்துள்ளனர். அந்தப் பொது மகனை சிறிது தூரம் அழைத் துச் சென்ற இராணுவத்தினர், அவரைக் கடுமையாக அச்சுறுத்தியதுடன் அலைபேசி யைப் பறித்தெடுத்து ஒளிப்படங்கள் அனைத் தையும் அழித்துள்ளனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் பரமேஸ் வராச் சந்தி எரிபொருள் நிரப்பு நிலையத் துக்கு முன்பாக உள்ள சிங்கள மாணவர்கள் தங்கியிருக்கும் விடுதிக்குள் புகுந்த சிங்கள மாணவர்கள் சிலர் அங்கு கைகலப்பில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் பல்கலைக்கழக வளாகத் துக்கு வெளியில் இடம்பெற்றதால், அதில் தலையீடு செய்யாத பல்கலைக்கழக நிர் வாகம், சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலி ஸாருக்கு தகவல் வழங்கியது. எனினும் சம்பவம் இடம்பெற்று ஒரு மணி நேரத்துக்கு மேலாகியும் பொலிஸார் எந்தவொரு நட வடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றஞ் சாட்டப்பட்டது. (ம-3.9)

## எதிர்வரும் 10ஆம்...

யும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழ் மக்கள் பேரவை கேட்டுள்ளது. (ம)

## ரணில் - சஜித்...

அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று மாலை 7.30 மணி வரை பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக சாட்சியமளித்த பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாஸவைச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் மிக இரகசியமாக பாதுகாக்கப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கூட்டணியை அமைப்பது, மற்றும் ஜனாதிபதி வேட்பாளர் ஆகியன தொடர்பாக எழுந்துள்ள குழப்பங் களை தீர்ப்பது குறித்தே இந்தச் சந்திப்பில் பேசப்பட்டிருக்கலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (ம-3)

## நீதியரசர் விக்...

வுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் எதிர்வரும் 10ஆம் திகதி நீதி மன்ற அவமதிப்பு வழக்கில் விக்னேஸ்வ ரன் தீர்ப்பை எதிர்நோக்குகிறார். டெனீஸ் வரன் வழக்கை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றமே, இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கையும் விசாரிப்பதால் இந்த வழக்கின் தீர்ப்பு 10ஆம் திகதி வருவதற்கு முன்னர் விக்னேஸ்வரன் தரப்பில் மேன்முறையீடு செய்யப்படலாமெனத் தெரிகிறது. (ம-3)

## கரு ஜயசூரியவே...

தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பி.எம்.ஐ.சி.எச். இல் நேற்று மாலை நடைபெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் தேரர் இதனைக் கூறியுள்ளார்.

சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு மூன்று பௌத்த பீடங்களினாலும் வழங்கப்பட்ட கௌ ரவ பட்டத்தை ஏற்றுக் கொள்ளும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தேரர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## காய்ச்சலுக்கு சில...

roidal anti-inflammatory drugs NSAIDS) மற்றும் ஸ்ரிறொயிட் (Steroid) மருந்து களைப் பாவிக்க வேண்டாம் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க வெளி யிட்டுள்ள அவசர ஊடக அறிவித்தலிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில், "தற்போது இலங் கையின் பல மாவட்டங்களில் டெங்கு நோயின் தாக்கம் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தென்மேற்கு பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலநிலை காரணமாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி மற்றும் மாத் தறை ஆகிய மாவட்டங்களில் இந்நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டது.

இந்நிலையில் சில டெங்குக் காய்ச்சல் நோயாளிகள் குறிப்பிட்ட சில மருந்து வகை களைப் பாவித்த காரணத்தால் அவர்களது நிலைமை மோசமடைந்ததுடன் சிலர் உயிரிழந்தும் உள்ளதாக சுகாதார அமைச் சுக்கு தெரியவந்துள்ளது.

அதன்படி அஸ்பிரின் (Aspirin), புருபன் (Ibuprofen), டைக்கிலோபெனாக் சோடியம் (Diclofenac sodium), மெபனமிக் அசிட் (Mefenamic acid) மற்றும் இவ்வகை யினைச் சேர்ந்த வேறு ஸ்ரிறொயிட் அல்லாத அலர்ஜி எதிர்ப்பு மருந்துகள், மேலும் ஸ்ரிறொயிட் வகையினைச் சேர்ந்த மருந்து களான பிறெட்னிசலோன் (Prednisolone) மீதைல் பிறெட்னிசலோன் (Methylpred-nisolone) மற்றும் டெக்ஸாமெத்தசோன் (Dexamethasone) ஆகிய மருந்துகளை காய்ச்சல் நோயாளர்கள் உள்ளெடுக்க வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது.

அத்துடன், நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கும் வைத்தியர்கள் காய்ச்சல் நோயா ளர்களுக்கு மேற்படி மருந்துகளைப் பரிந் துரைக்காது தவிர்க்கவேண்டும் என்பதுடன் பொதுமக்கள் காய்ச்சலுக்காகத் தாங்கள் பாவிக்கும் மருந்துகள் குறித்து தெரிந்து கொள்ள வேண்டும்" என அறிவுறுத்தப்பட் டுள்ளது. (ம-3)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 07-08-2019
சீட்டிழுப்பு இலக்கம் 963
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 6 6 6 8 9 1

கொவிசெத
திகதி 2019.08.07
சீட்டிழுப்பு இலக்கம் 2202
A 25 37 45 75

தன நிதானய
திகதி 2019-08-07
சீட்டிழுப்பு இலக்கம் 184
J 07 08 44 51

மெகா பவர்
திகதி 2019/08/07
சீட்டிழுப்பு இலக்கம் 0416
B 08 09 29 42 52

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 268
சீட்டிழுப்பு திகதி 07.08.2019 நீலம்
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 30 64 69
விதி எண் 4
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி
திகதி 07.08.2019 வெற்றி வாரம் 2579 வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 13 44 48 51 கும்பம்
ரூ.500 பரிசுக்காக 6740
ரூ.100 பரிசுக்காக 222
விசேட இல.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 693 வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.08.07
விசேட இலக்கம் 8226
வெற்றி இலக்கங்கள் 21 26 29 66
ஆங்கில எழுத்து E

சீட்டிழுப்பு இல: 3219 வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.08.07
ரூ. 55,134,080/-
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் 19 42 55 64
ஆங்கில எழுத்து J
போனஸ் இலக்கம் 43

## பணியாளர்கள் தேவை

தனியார் நிறுவனமொன்றிற்கு தொழில்களைப் பழகிச் செய்வதில் விருப்பமுடைய பெண் பணியாளர்கள் உடனடியாகத் தேவை

O/L படித்த பெண்பிள்ளைகள் இணைந்து கொள்ளலாம் உடன் நேரில் வரவும்

தூரிகை - மத்திய கல்லூரி வீதி
நுண்கலை வளாகம் நெல்லியடி
இயக்குநர் : 077 914 3171
(C-7227)

## வாடகைக்கு

நல்லூரில் வெளி இடங்களில் இருந்து வருபவர்களிற்கு ஏற்ற தனி அறை சமையல் அறை வசதியுடன் வாடகைக்கு.

தொடர்பு: 077 788 7360
(9828)

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிக்வும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932,
021 223 2222 (உரும்பிராய்)
(9829)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு




UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg
(C-7197)

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

✆ 0768226240
V2 TRAVELS

நல்லூர் மகோற்சவ காலத்தில்

# தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் கலாசார உடையை அணியுங்கள்

## தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தில் தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் கலாசார உடைகளை பக்தர்கள் அனைவரும் அணிந்து வர வேண்டும் என்று தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை வலியுறுத்தியுள்ளது.

மேலும் இது தொடர்பாக தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் யாழ் மாநகர சபை உறுப்பினருமான எஸ்.நிஷாந்தன் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வரலாற்று பிரசித்திபெற்ற நல்லூர் பெரும் திருவிழா உற்சவம் தற்பொழுது ஆரம்பமாகியுள்ள நிலையில் தமிழர்களின் கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் வழமை போன்று பாதுகாத்து எம் அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைக்க வேண்டிய தார்மீக பொறுப்பும் கடமையும் தமிழர்களாகிய எமக்கு மட்டுமே உண்டு என்பதை நாம் அனைவரும் புரிந்து கொண்டு முன்னுதாரணமாக செயற்பட வேண்டும். திருவிழா உற்சவ நாட்களில் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் தமிழ்க் கலாசா ரத்தை பிரதிபலிக்கும் ஆடைகளை மட்டுமே அணிந்துவர வேண்டும்.

புலம் பெயர் தேசங்களில் இருந்து விடுமுறையை கழிப்பதற்காக தாயகம் திரும்பும் எம் உறவுகள் அதிலும் குறிப்பாக நல்லூர்க் கந்தனை தரிசிக்க குடும்பத்தோடு வரும் பக்த அடியார்கள் நல்லூர் ஆலய சுற்றாடலுக்கு வரும் போது கட்டாயமாக தமிழ் கலாசார உடைகளை அணிந்து வர வேண்டும்.

மேலும் நல்லூர் ஆலய சுற்றாடலுக்குள் பக்தர்களுக்கு இடையூறாகவும், அநாகரீகமாகவும், மதுபோதை மற்றும் துர்நடத்தை போன்ற செயற்பாடுகளில் யாரும் ஈடுபட முடியாது என்றும் இவ்வாறானவர்களை கண்காணித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையினர் தயாராக உள்ளார்கள் என்று மேற்படி ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-3)

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் உள்ள அச்சகம் ஒன்றுக்கு Graphic Designer (பெண்) தேவை.

தொடர்புகளுக்கு :
021 722 3313 / 021 221 4221
(9833)

## போட்டிப் பரீட்சை வகுப்புகள்

கணக்காளர் சேவை III

ஆரம்பம் 10.08.2019 சனி 9.00 am
பிரதி சனி, ஞாயிறு 9.00 am - 3.00 pm

Note : யாழ், கொழும்பு முன்னணி வளவாளர்களினால் வழிகாட்டல் வகுப்புக்கள் நடைபெறும்.

SLAS பிரதி, சனி, ஞாயிறு 9.00 - 4.00 p.m
(C-7226)

நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P : 076 166 1986, 077 469 6695.

# கப்பூது காட்டுப்பகுதியில் கசிப்புக்குகை முற்றுகை

## சந்தேகத்தில் ஒருவர் கைது

(கரணவாய்)

கப்பூது காட்டுப் பகுதியில் நெல்லியடி பொலிசார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதலில் கசிப்பு குகை ஒன்று அகப்பட்டுக் கொண்டதில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மேற்படி பகுதியில் கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாக நெல்லியடி பொலிசாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து அங்கு சென்ற பொலிசார் 25 லீற்றர் கசிப்பினை மீட்டதுடன் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களையும் பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றனர்.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சாவகச்சேரி பகுதியினைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(ம-3,60)

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் எமரல்ட் ஐல் தரும்

## கனடா

கட்டடப்பணியாளர் வேலைவாய்ப்பு



Plasters, Drywall Installers, Lathers, Bricklayers, Industrial Painters & Decorators

மேசன் (கட்டுமானம்-பூச்சு), பெயின்றிங், வெல்டிங், ஜிப்சம் காப்பென்ரர் வேலை.
தொழில் ரீதியான ஆங்கில அறிவு உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

சம்பளம் மணிக்கு - ரூ.2,793

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
(C7228)

IELTS அவசியமில்லை

2 வருட பணி ஒப்பந்தம். நாளொன்றுக்கு 8 மணி / வாரம் 5 நாட்கள் வேலை

077 00 38 215, 0777 324 004, 021 221 9 221

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Lover/Teen Girls க்கு அருகே
email. jaffna@emeraldisle.lk www.emeraldisle.lk

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623
(9769)

## வலம்புரி


விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# இதய அஞ்சலி

யா/அல்லைப்பிட்டி றோ.க.த.க வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்

## திருமதி இராஜலட்சுமி வாமதேவன்

[இராசப்பா ரீச்சர்]



அவர்கள் 07.08.2019 செவ்வாய்க்கிழமை காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/அல்லைப்பிட்டி றோ.க.த.க வித்தியாலய பாடசாலைச் சமூகம்.

தோற்றம் : 05.07.1934
மறைவு : 07.08.2019
(C-7225)

# நீங்கா நினைவுகளுடன்...

மூன்று ஆண்டுகள் 27 மாதங்கள்



தோற்றம் 12 - 05 - 1939
மறைவு 10 - 08 - 2016

## வயிரமுத்து சிவலிங்கம்

(ஓய்வுநிலை ஆசிரியர்)
திதி : அட்டமி



தோற்றம் 23 - 11 - 1950
மறைவு 24 - 05 - 2017

## சிவலிங்கம் கனகமணி

திதி : திரயோதசி

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும் ,
மண் விட்டு மறைந்த நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல் காலா காலம் இருப்பீர்கள்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

குப்பிளான் தெற்கு, ஏழாலை.

## உடனடி வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கான பதவி வெற்றிடங்கள் நேர்முகத் தேர்விற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ளோர் விரும்பத்தக்கது.
O/L, A/L படித்தவர்கள் உடனே அழையுங்கள்.
தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு : 076 666 8385
(C-9832)

## துரித தபால்கள் பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு
UK - 600/=
Germaney - 700/=
France - 700/=

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
0777 554 528
(C-7109)

## வேலையாள் தேவை

ஒப்பந்தகார நிறுவனமொன்றிற்கு பூந்தோட்ட பராமரிப்பு, அலுவலக வளாகம் மற்றும் களஞ்சிய அறை, (Garden Maintenance and Cleaning Work) போன்றவற்றை துப்புரவு செய்வதற்கு கூலியாள் தேவைப்படுகின்றார்.

வயதெல்லை :- (40 - 55) வரையானவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம் :- 25,000/= Per Month, EPF + உணவு + தங்குமிடம்

தொடர்புகொள்ள வேண்டிய நேரம் :- 8.30 a.m to 1.00 p.m
தொலைபேசி இலக்கம் : 021 224 3881 / 075 317 3834
(9831)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.